# லீலா தமிழ்ச் செல்வம்

## முதற்புத்தகம்

## நான்காம் படிவம்—சிறப்பு

தொகுப்பாசிரியர் :

T. S. உமாபதி, M.A., L.T., (Dip. in Geog.)

தலைமை ஆசிரியர், சி. அப்துல் ஹக்கிம்
இந்து முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி, சென்னை.

பதிப்பாசிரியர் :

வித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE

M. சேஷாசலம் அண்டு கம்பெனி
7, சுங்குராம செட்டித் தெரு, சென்னை–1

பதிப்புரிமை] 1954 [விலை அணா 10

முதற்பதிப்பு—செப்டெம்பர், 1953
இரண்டாம் பதிப்பு—மே, 1954

# முகவுரை

'லீலா தமிழ்ச் செல்வம்' என்னும் பெயருடன் வெளி வரும் இத்தொகுப்பு நூல் நமது இராச்சியத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் நான்காம் பாரத்தில் தமிழைச் சிறப்பாகப் பயிலும் மாணவ மாணவியர்க்குரியது. இது 1952-ஆம் ஆண்டு, ஜூலைத் திங்களில் உயர்நிலைப் பள்ளிகளுக்கென அரசினர் வெளியிட்ட பாடத்திட்டத்தை முற்றிலும் பின் பற்றித் தொகுக்கப்பட்டுள்ளது.

இதன்கண் சங்க காலம், இடைக்காலம், பிற்காலம் என்னும் தலைப்புக்களில் இடம் பெற்றுள்ள செய்யுட்பாடங்கள், பண்டு முதல் இன்றளவும் செய்யுள் நிலையில் ஏற்பட்டு வந்துள்ள வேறுபாடுகளை மாணவ மாணவியர் அறிதற்குத் துணை புரியுமென்பது எனது எண்ணம். அன்றியும், இப்பாடங்கள் தமிழ்த் தொண்டில் சமய வேறுபாடின்றிச் சைவர், வைணவர், சமணர், பௌத்தர், கிறித்தவர், இஸ்லாமியர் அனைவரும் ஈடுபட்டுச் சிறந்ததொரு தமிழர் சமுதாயத்தை உருவாக்க முயன்றுள்ளனர் என்பதை விளக்குதலும் ஒருதலை. உரைநடைப் பாடங்களும் அங்ஙனே அமைக்கப் பெற்றுள்ளன.

பாடத்திட்டத்தில் பொதுப் பகுதிக்கு 200 வரி அளவுக்குச் செய்யுட்பாடங்களும், 30 பக்க அளவுக்கு உரைநடைப் பாடங்களும் நிர்ணயிக்கப்பட்டுள்ளனவாயினும், இடத்துக்கிடம் மாணவ மாணவியர் தரம் வேறுபடக் கூடுமாகலின், தத்தம் மாணவர் நிலைக்கேற்பத் தமிழாசிரியர்கள் பாடங்களைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளற்பொருட்டுப் பாடத்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட அளவுகட்கு அதிகமாகவே செய்யுட்பாடங்களும் உரைநடைப் பாடங்களும் சேர்க்கப்பெற்றுள்ளன.

இந்நூல் உருவாவதற்கு உறுதுணையாக உயரிய கட்டுரைகள் நல்கிய அறிஞர் பெருமக்கள் அனைவர்க்கும் யான் பெரிதும் கடப்பாடுடையேன். அவர்கட்கு எனது உளமார்ந்த நன்றியை உரிமைப்படுத்துகிறேன். இந்நூல் அச்சாகுங்கால் இன்றியமையாத திருத்தங்கள் நல்கி, பிரதிகளை ஒப்பு நோக்கி, சிறந்த முறையில் இது வெளி வருமாறு செய்த இதன் பதிப்பாசிரியரும் எனது மதிப்பிற்குரிய கெழுதகை நண்பருமாய வித்துவான் திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கட்கும் எனது அன்பு கலந்த நன்றியை உரிமைப்படுத்துகிறேன். இதற்கு ஆதரவு நல்கி எனக்குத் துணை புரியுமாறு ஆசிரிய அறிஞர் உலகத்துக்கு எனது பணிவு மிக்க வேண்டுகோள் உரியதாகுக.

த. சே. உமாபதி

Kabeer Printing Works, Madras (2505)

# நன்றியுரை

கீழ்க் குறிக்கப்பெறும் கட்டுரைகளை இந்நூலிற்சேர்த்துக்கொள்ள அன்பு கூர்ந்து அனுமதியளித்த அவற்றின் ஆசிரியர்கட்கும் உரிமையாளர்க்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் :

1. இலக்கியம்—திரு. M. S. கோடீஸ்வரனுர் அவர்கள், தலைவர், மஹபூப் கல்லூரி, ஹைதராபாது (உரிமையாளர்)

2. கூட்டுறவுச் சங்கங்கள்—டாக்டர் பா. நடராசனுர், M.A., D. Litt. (சென்னை அரசாங்கத்தின் பொருளாதார ஆலோசகர்)

3. தமிழிலக்கியச் செல்வம்—யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், புதுச்சேரி.

4. சிமிட்டி—திரு. A. இராமகோபாலர், நிலச்சுவான்றர், திண்டுக்கல்.

5. புரட்சிக் கவிஞர் இளங்கோ—திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் (தலைவர், தமிழரசுக் கழகம்).

6. தமிழ் நாட்டின் சோமநாதபுரம்—திரு. தொ. பாஸ்கரத் தொண்டைமான், M. A. டெப்புட்டி கலெக்டர், திருநெல்வேலி ஜில்லா.

# உள்ளுறை

## செய்யுட்பகுதி


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | இறை வணக்கம் | ... | 1 |
| II. | முற்கால இலக்கியம் | | |
| | 1. பத்துப்பாட்டு : பட்டினப்பாலை | ... | 2 |
| | 2. எட்டுத்தொகை : புறநானூறு | ... | 3 |
| | 3. மணிமேகலை | ... | 3 |
| III. | இடைக்கால இலக்கியம் | | |
| | பாரத வெண்பா | ... | 6 |
| IV. | பிற்கால இலக்கியம் | | |
| | இரட்சணிய யாத்திரிகம் | ... | 10 |
| V. | அறவுரை | | |
| | 1. தினகர வெண்பா | ... | 12 |
| | 2. இரங்கேச வெண்பா | ... | 12 |
| VI. | பல்சுவை | ... | 13 |


## உரைநடைப் பகுதி


| | | | |
|---|---|---|---|
| 1. | கற்றுய்ந்தொழுகல்<br>—அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் | ... | 18 |
| 2. | இலக்கியம்<br>—திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் | ... | 26 |
| 3. | கூட்டுறவுச் சங்கங்கள்<br>—டாக்டர் பா. நடராசனர், M.A., D. Litt. | ... | 32 |
| 4. | தமிழிலக்கியச் செல்வம்<br>—யோகி, ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் | ... | 37 |
| 5. | சிமிட்டி<br>—திரு. A. இராமகோபாலர் | ... | 41 |
| 6. | புரட்சிக் கவிஞர் இளங்கோ<br>—திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் | ... | 50 |
| 7. | தமிழ் நாட்டின் சோமநாதபுரம்<br>—திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், M. A. | ... | 54 |
| 8. | ‘எடுக்கவோ, கோக்கவோ?’<br>—திரு. ந. சே. உமாபதி, M.A., L.T., (Dip. in Geog.) | ... | 62 |

# லீலா தமிழ்ச் செல்வம்

## நான்காம் படிவம்—சிறப்பு

## செய்யுட்பகுதி

### I. இறை வணக்கம்

நீல மேனி வாலிழை பாகத்(து)
ஒருவ னிருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகு முகிழ்த்தன முறையே. 1

—பாரதம் பாடிய பெருந்தேவனூர்

வேதமும், வேதம் விளம்புமெய்ப் பொருளும்,
அப்பொருள் விதங்களும், பஞ்ச
பூதமும், புலனும், புலன்களின் பயனும்,
அப்பயன் பொலிவுற நுகரும்
ஞாதமும், உலகம் படைத்தளித்(து) அழித்து
ஞானமாய் அகிலமு நிறைவுற்(று)
ஆதியும் நடுவும் முடிவுமாய் நின்ற
ஆதியான் அடியிணை பணிவாம்! 2

—வில்லிபுத்தூராழ்வார்

# II. முற்கால இலக்கியம்

## 1. பத்துப் பாட்டு

### பட்டினப்பாலை

காவிரியின் சிறப்பு

வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவின்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும். 1

காவிரிப்பூம்பட்டினத்தில்
பன்மொழி மக்கள் இருப்பு

பல்லாயமொடு பதிபழகி
வேறுவே றுயர்ந்த முதுவா யொக்கல்
சாறயர் மூதூர் சென்றுதொக் காங்கு
மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம். 2

—கடியலூர் உருத்திரங்கண்ணனார்

## 2. எட்டுத்தொகை

### புறநானூறு

‘ யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியர்?’என வினவுதி ராயின்,
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர் ;
யான்கண் டனையரென் னிளையரும் ; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் ; அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே. 1

—பிசிராந்தையார்

உண்டால் அம்மஇவ் வுலகம் : இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே ; முனிவிலர் ;
துஞ்சலும் இலர்;பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின், உயிருங் கொடுக்குவர் ; பழியெனின்,
உலகுடன் பெறினும் கொள்ளலர் ; அயர்விலர் ;
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. 2

—கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

## 3. மணிமேகலை

### பளிக்கறை புக்க காதை

‘ பரிதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்(கு)
இருள்வளைப் புண்ட மருள்படு பூம்பொழிற்
குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய
வெயில்நுழை பறியாக் குயில்நுழை பொதும்பர்

மயிலா டரங்கின் மந்திகாண் பனகாண் ;
மாசறத் தெளிந்த மணிநீர் இலஞ்சிப்
பாசடைப் பரப்பிற் பன்மல ரிடைநின்(று)
ஒருதனி யோங்கிய விரைமலர்த் தாமரை
அரச வன்னம் ஆங்கினி திருப்பக்
'கரைநின் றாலும் ஒருமயில் தனக்குக்
கம்புட் சேவற் கனைகுரல் முழவாக்
கொம்பர் இருங்குயில் விளிப்பது காணாய் ;
இயங்குதேர் வீதி எழுதுகள் சேர்ந்து
வயங்கொளி மழுங்கிய மாதர்நின் முகம்போல்
விரைமலர்த் தாமரை கரைநின் றோங்கிய
கோடுடை தாழைக் கொழுமடல் அவிழ்ந்த
வால்வெண் சுண்ணம் ஆடிய திதுகாண் ;
மாதர் நின்கண் போதெனச் சேர்ந்து
தாதுண் வண்டினம் மீதுகடி செங்கையின்
அஞ்சிறை விரிய அலர்ந்த தாமரைச்
செங்கயல் பாய்ந்து பிறழ்வன கண்டாங்(கு)
எறிந்தது பெறாஅ திரையிழந்து வருந்தி
மறிந்து நீங்கும் மணிச்சிரல் காண்,' எனப்
பொழிலும் பொய்கையுஞ் சுதமதி காட்ட,
மணிமே கலையம் மலர்வனங் காண்புழி
மதிமருள் வெண்குடை மன்னவன் சிறுவன்
உதய குமரன் உருகெழு மீதூர்
நீயான் நடுங்க நடுவுநின் றோங்கிய
கூம்புமுதல் முறிய வீங்குபிணி யவிழ்ந்து
கயிறுகால் பரிய வயிறுபாழ் பட்டாங்(கு)
இதைசிதைந் தார்ப்பத் திரைபொரு முந்நீர்
இயங்குதிசை அறியா(து) யாங்கணு மோடி
மயங்குகா லெடுத்த வங்கம் போலக்
காழோர் கையற மேலோ ரின்றிப்

பாகின் பிளவையிற் பணைமுகந் துடைத்துக்
கோவியன் வீதியுங் கொடித்தேர் வீதியும்
பீடிகைத் தெருவும் பெருங்கலக் குறுத்தாங்(கு)
இருபாற் பெயரிய வுருகெழு மூதூர்
ஒருபாற் படாஅ தொருவழித் தங்காது
பாகும் பறையும் பருந்தின் பந்தரும்
ஆதுல மாக்களும் அலவுற்று விளிப்ப
நீல மால்வரை நிலனொடு படர்ந்தெனக்
கால வேகங் களிமயக் குற்றென
விடுபரிக் குதிரையின் விரைந்துசென் றெய்திக்
கடுங்கண் யானையின் கடாத்திற மடக்கி
அணித்தேர்த் தானையொ டரசிளங் குமரன்
மணித்தேர்க் கொடுஞ்சி கையாற் பற்றிக்
காரலர் கடம்பன் அல்ல னென்ப(து)
ஆரங் கண்ணியிற் சாற்றினன் வருவோன்,

[எட்டி குமரன் என்னும் வணிகன் மணிமேகலை உவவனம் சென்றதைக் கூறக் கேட்டு]

மதுமலர்த் தாரோன் மனமகிழ் வெய்தி,
‘ ஆங்கவ டன்னையென் அணித்தேர் ஏற்றி
ஈங்கியான் வருவேன்,’ என்றவற் குரைத்தாங்(கு)
ஓடுமழை கிழியும் மதியம் போல
மாட வீதியின் மணித்தேர் கடைஇக்
காரணி பூம்பொழிற் கடைமுகங் குறுக,அத்
தேரொலி மாதர் செவிமுதல் இசைத்தலும்,

[‘இதற்கு யாது செய்வேன் !’ என்று மணிமேகலை உரைத்தலும், சுதமதி அவளை அவண் இருந்த பளிக்கறையினுள் ஒளித்துத் தாழிட்டுச் சேய்மையில் நின்றனள்.]

# III. இடைக்கால இலக்கியம்

## பாரத வெண்பா

### தாயும் சேயும்

தன்னுடைய முன்னே படாம்போர்க்கத் தார்வேந்தன்
'என்னுடைய மாதா இவள்,'என்ன—நன்னுதலாள்
பொன்அடிமேல் வீழ்ந்தானைப் பொன்தடக்கை யால்தழுவித்
தன்மடிமேல் வைத்தாள் தளர்ந்து. 1

### குந்தி தேவி

'உனக்கினிய தம்பிமார் ஐவரையும் ஒன்றி
வனக்கிரிசூழ் மண்ஆள எண்ணி—உனக்கிதனைச்
சொல்லுவான் வந்தேன் ; சுடர்வேலாய் ! போ(து)'என்றாள்
வில்லுலாம் வாள்நுதலாள் மீட்டு. 2

'மண்எலாம் காத்தளித்து மன்னர்எலாம் வந்திறைஞ்சக்
கண்எலாம் காதல் களிகூரப்—பண்ணுலாம்
பொற்றேரில் போந்தேறிப் போர்வேந்தர் ஐவரையும்
குற்றேவல் கொள்ளாய் குறித்து.' 3

### கன்னன்

'ஆவி அனையார்கள் ஐவர்க்கும் முன்றோன்றல்
மேவி அனைய வினையேனைப்—பாவியேன்
முன்செய்த தீவினையால் முன்புரையா(து) இன்றுரைத்தீர் ;
என்செய்வேன் சொல்லீர் இனி ? 4

'இன்னான் எனஅறியா என்னை முடிகவித்து
மன்னர் வணங்க அரசியற்றிப்—பின்னையும்
தன்எச்சில் உண்ணாத் தகைமையான் தான்உண்டான்
என்எச்சில் என்னோ(டு) இனிது. 5

'கொன்னவிலும் தேர்ப்பாகன் என்று குலம்பேசி
என்னைப் பலரும் இகழ்ந்துரைப்பப்—பின்னையும்தான்
என்எச்சில் என்னோடும் உண்டானை எங்ஙனே
உன்னச் சிழப்பேன் ? உரை. 6

‘பன்மணிகள் சிந்திப் பரந்து கிடந்ததுகண்(டு),
‘இன்மணிக்(கு) என்உற்ற(து)?’ என்னாமல்–‘நன்மணியைக்
கோக்கோ, பொறுக்குகோ?’ என்றானுக்(கு) என்உயிரைப்
போக்கா(து) ஒழிவேனோ புக்கு? 7

‘உந்தமது புத்திரர்க்கா நல்லீராய் வந்தீர்நீர்;
இன்றென்மேல் ஆசை இலைஉமக்(கு);—அன்று
வடுஅஞ்சிப் போவிட்டீர்; மாண்டேனேல் இன்று
நடஎன்பீர் ஆரை நயந்து? 8

‘நன்றாக மன்னன் எனக்கிந்த நாடறியக்
குன்றாத நன்மை பலகொடுத்தான்;—என்றாலும்,
ஈண்டவன் செய்த உதவியினை யான்மறந்தால்
தீண்டுவளோ தாமரையாள் சேர்ந்து? 9

‘பார்த்தனையான் கோறல் அவன்கைப் படுதல்எனும்
வார்த்தையுரை செய்தேன் மனமகிழ—ஏற்கும்
பொருவெஞ் சமர்தன்னில் போந்தெதிர்ந்தால் மற்றாங்(கு)
ஒருவருந்தாம் இல்லை எதிர்.’ 10

குந்தி தேவி

‘வெஞ்சரம்கோத் தெய்து விறலழிக்கும் நன்மகனே!
பஞ்சவரில் பார்த்த னுடன்மலைந்தால்—அஞ்சுதலை
நாகம் இருகால் தொடாதொழிக,’ என்றுரைத்தாள்
ஆகம் உறத்தழுவி ஆங்கு. 11

கன்னன்

‘நாகம் இருகால் தொடாதொழிய வேண்டுமென்(று)
ஆக உரைத்தீர்; அதுகேண்மின்:—வேகம்
ஒருகால் தொடுத்தால், உதுபிழைத்தால், பின்னை
இருகால் தொடாதொழிந்தேன் யான்.’ 12

குந்தி தேவி

‘தருமனொடு வீமன் தனஞ்சயனும் அல்லால்
இருவரும்வந்(து) ஆங்குன்னோ(டு) ஏன்று—பொருகளத்து
முட்டிநேர் வந்தாலும் புத்திரனே! ‘கொல்லேன்’என்(று)
ஒட்டுயான் வேண்டுவனால் உற்று.’ 13

கன்னன்

'பொன்னே! எனைப்பயந்த பொற்கொடியே! இன்றுனக்கு
மின்நேர் இடையாய்! மறுப்பெனே?—'பொன்னாய்முன்
பெற்றதாய் வேண்ட மறுத்தான்,' எனும்வார்த்தை
உற்றழியா நிற்கும் உலகு. 14

'மற்றவர்க் கெல்லாம் மறுதென்னை வாய்த்தவரம்
பெற்றாய் பெறப்பேசல் வேண்டுமோ?—கற்றபோர்
வெல்லும் கணையொருகால் தொட்டாலும் நால்வரையும்
கொல்லேன் படிஒருகால் கூர்ந்து. 15

'அம்மையீர்! வேண்டிற்றுப் பெற்றீர்! அதுஈந்தேன்;
உம்மையான் வேண்டுவதிங் கொன்றுண்டு:—செம்மை
அலர்கதிர்வேல் கையான் அருச்சுனன்கைப் பட்டால்
பலர்காணப் பால்அருத்து வீர். 16

'போர்க்களத்தில் யான்பொருது பொன்றினல் எம்பியரால்
தீக்கடனும் நீர்க்கடனும் செய்விப்பீர்;—சேர்க்கும்
மருமலரும் தாரார் மணிமுடியார் காண
உரிமையுடன் செய்ம்மின் உகந்து. 17

'உன்னுடைய மைந்தர்க்கிவ் வுண்மை தனையுரைக்கில்
அன்னவர்கள் பாகம் எனக்களிப்பர்;—பின்அதனை
ஈங்கெனது தோழற்கே யான்கொடுப்பேன்; ஆதலால்,
ஆங்கவர்கட்(கு) இல்லை அரசு.' 18

குந்தி தேவி

'முன்செய்த பாவத்தால் மூத்தாய்! உனைப்பிரித்தேன்;
என்செய்தால் இப்பிழைதான் தீரும்?'எனப்—பொன்செய்த
மட்டவிழும் தாரானை மார்புறவே தான்அணைத்து
விட்டவளும் மீண்டாள் விரைந்து. 19

'பாராளும் பாண்டவர்க்காய்ப் பாவியேன் என்மகனைக்
கோறைகம் வேண்டிக் கொலைநேர்ந்தேன்!—ஆனாலும்
தேவர்க்காங் கொல்லோ! திரிவில்லா தாங்கொல்லோ!
யாவர்க்காம் பாவம் இது?' 20

**கன்னன்**

‘ பாரதத்துட் பட்டேன் ; படேனுகில் பாண்டவர்பால்
ஆதரித்து நான்வருவேன் ஆரணங்கே !—சீர்மிகுத்துன்
பொற்கமல பாதம் புரிகின்றேன் ; போ,’என்ருன்
நற்றவத்தின் மிக்கோன் நயந்து. 21

‘ மல்உயர் தோள்பார்த்தன் மாயன் உடன்நிற்கக்
கொல்லும் இவனை !’ எனக்குலையா,—நல்லமழைக்
கார்ஆரும் பூங்குழலாள் காதலொடு கண்இணைகள்
நீர்ஆரப் போனுள் நினைந்து. 22

—பெருந்தேவனர்

# IV. பிற்கால இலக்கியம்

## இரட்சணிய யாத்திரிகம்

### இரட்சணிய சரிதப் படலம்

(சிலுவைப் பாடு)

**பொல்லாத** யூதர்களும் போர்ச்சே வகர்குழுவும்
வல்லானை யெள்ளிப் புறக்கணித்து வாய்மதமாய்ச்
சொல்லாத நிந்தைமொழி சொல்லித் துணிந்தியற்றும்
பொல்லாங்கை யெல்லாம்நம் ஈசன் பொறுத்திருந்தான். 1

செவ்வங் கியைக்களைந்து தேவர்பிரான் முன்றரித்த
அவ்வங் கியைத்தரித்தே ஆகடியம் பல்பேசித்
தெவ்வர் குழுமிச் சிலுவை தனைச்சுமத்திக்
கவ்வை நகர்கலுழக் கட்டிக் கொடுபோனர். 2

**வள்ளல்** குருராயன் மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை
எள்ளி யவதரித்த எம்மான் சருவேசன்
கொள்ளை புரிந்து கொலைதீர்ப்புப் பெற்றுவரு
கள்ள ரிருவரொடுங் கல்வாரி நோக்கினன். 3

**கை**யயர்ந்து வாய்புலர்ந்து கண்ணிருண்டு காதடைத்து
வெய்ய சிலுவை சுமந்தலசி மெய்வருந்தித்
துய்ய திருவடிகள் சோர்ந்துநடை தள்ளாடி
அய்யன்மறு கூடுவரக் கண்டா ரணிநகரார். 4

'**மா**தருக்கு ளாசிபெற்ற மங்கலையாம் அன்னைமரி
காதலனுக் கோவிக் கதிநேர்ந்த தெ'ன்றுமன
வேதனைப்பட் டாற்றுது மெல்லியலார் தாங்குழுமி
வீதி யிருமருங்கும் மொய்த்தார்வாய் விட்டழுது. 5

'ஆவா! இதென்ன அறவுமநி யாயம்!' என்பார்;
'தாவா தறமோ தலைசாய்ந் திறுவ'தென்பார்;
'மூவா முதல்வன் முனியாத தென்?' என்பார்;
'ஓவா துழலெம் முயிர்க்கொழிவின் றே?' என்பார். 6

'செந்தா மரைபோற் றிகழுந் திருவதனம்
அந்தோ! வதங்கி அழகுகுடி போயெ'தன்பார்;
'நந்தாக் கருணை நருத்துளிக்குங் கண்மலர்கள்
சிந்தா குலம்பொதிந்து தேசிழந்து விட்ட!'என்பார். 7

பெண்டிரெலா மழுதரற்றப் பிள்ளைகளெ லாங்கதறக்
கண்டுகேட் டவரிரங்கிக் கரைந்துருகிக் கருத்தழிய
மண்டுதுய ரெனுந்தீயால் வயிறெரியக் கடிநகரம்
பண்டெரிவீழ்ந் தழிசோதோம் பதிபோலப் பதைத்தேங்க 8

குழல்நூலிற் பிரியாத குருத்துவமா ரருட்சீடர்
அழலனைய துயர்நலிய அழுதுகரந் துடன்செல்லப்
பழுதறுமெய்ப் பரம்பொருளை மகவாக்கொள் பசுந்தோகை
தழலிடுபூங் கொடியேபோற் சாம்பியுயிர் தளர்ந்தேக 9

இப்பரிசு பெருந்துக்கக் குறிமல்கி யெவ்வுயிருஞ்
செப்பரிய துயருழப்பச் செருசலையைப் புறம்போக்கி
ஒப்பரிய முதுமூலத் தொருபொருளைக் கொண்டுய்த்தார்
மைப்படுவன் மனக்கொலைஞர் வதைபுரிவான் கொலைக்களத்தில். 10

மற்றிரண்டு திருடரையும் வலப்புறத்து மிடப்புறத்துஞ்
செற்றமொடு குருசேற்றிக் கொலைமாக்கள் செயலொழியச்
சொற்றமறைத் திருவசனந் துலக்கமுறச் சுருதிமுதல்
குற்றவா ளிகளோடு நடுநின்றான் குருசுமிசை. 11

தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெ'தந்தாய்!
இன்னதென வறிகில்லார் தாஞ்செய்வ திவர்பிழையை
மன்னியும்!'என் றெழிற்கனிவாய் மலர்ந்தானம் அருள்வள்ளல். 12

—H. A. கிருஷ்ண பிள்ளை

# V. அறவுரை

## 1. தினகர வெண்பா

புறங்கூறுமை

ஏதிலார் பொல்லாங் கெடுத்துரைப்பார் ; தம்முடைய
தீது குறியார் ; தினகரா !—யாதும்
பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்
திறன்றெறிந்து கூறப் படும். 1

இன்னா செய்யாமை

குற்றமிகச் செய்தாரைக் கொல்லாமற் கொல்லவொரு
சிற்றறிவா ளுண்டே தினகரா !—உற்றதுகேள்
இன்னசெய் தாரை யொறுத்தல், அவர்நாண
நன்னயஞ் செய்து விடல். 2

கேள்வி

கற்றிலனே யாயினுங் கேட்க ; அஃதுளுற்றுஞ்
சிற்றறிவை நீக்கும் ; தினகரா !—முற்றும்
இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல். 3

—நாகராஜன்

## 2. இரங்கேச வெண்பா

செருக்கின்மை

பீடுபெறு பட்டினத்துப் பிள்ளையைப்போ லேதுறவார்க்(கு)
ஈடு தருமோ இரங்கேசா !—நீடுலகில்
யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்(கு)
உயர்ந்த வுலகம் புகும். 1

அடக்கமுடைமை

ஆன்ற சபையில் அடங்காச் சிசுபாலன்
ஏன்றிறந்தா னன்றோ இரங்கேசா !—சான்றோர்கள்
காக்க பொருளா அடக்கத்தை ; ஆக்கம்
அதனினூங் கில்லை உயிர்க்கு. 2

—சாந்தக் கவிராயர்

# VI. பல்சுவை

## முக்கண்ணர் துன்பம்

வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்
வாசல்தொறும் முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகு நெஞ்சிற் புண்ணும்
தீருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தேன் ; ' அப்பா !
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
கொடுங்காலால் உதைத்தபுண்ணும் கோப மாகப்
பஞ்சவரி லொருவன்வில்லால் அடித்த புண்ணும் !
பார்!'என்றே காட்டிநின்றான் பரமன் றானே. 1

—இராமசந்திர கவிராயர்

## கல்வி கற்கும் முறை

கோடல் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி, அவன்குறிப் பிற்சார்ந்(து),
'இரு,'என இருந்து, 'சொல்,'எனச் சொல்லிப்
பருகுவன் அன்ன ஆவர்த்த னாகிச்
சித்திரப் பாவையின் அத்தக(வு) அடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
'போ,'எனப் போதல் என்மனார் புலவர். 2

—பவணந்தி முனிவர்

## சிலேடை

நஞ்சிருக்குந் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டால் மீளாது—விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம். 3

—காளமேகப் புலவர்

ஆற்றின்பேர் ஈற்றின் எழுத்தொழிய இன்பஞ்சேர்
நாற்கால தாம்;ஈற் றுயிர்நடப்ப—ஏற்புடைய
உண்பயனும் ; ஆங்கதனி னீறெழிந்தால், ஓதுநூற்(கு)
இன்பஞ்சேர் செய்யுளாம் இன்று. 4

—தனிப்பாடல்

வெங்காயஞ் சுக்கானல் வெந்தயத்தால் ஆவதென்ன ?
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை ?—மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியா ரே ! 5

—சொக்கநாதப் புலவர்

## கிறிஸ்துவின் அருள் வேட்டல்

வான்காணு முழுமதியே ! வாடாத பொழிலே !
மருந்தறியா நோய்தீர்க்கும் மாமருந்தே ! மணியே !
ஊன்காணு உளத்திரக்கம் ஊற்றெடுத்தே ஓடி
ஒளிர்குருதி யாகிஉன்றன் உரங்கால்கை ஒழுகல்,
'நான்'காணுக் கண்ணினுக்கு நல்விருந்து செய்தாய்
நாயகமே ! நனவிலந்த நற்காட்சி அருளே ;
தேன்காணு இன்சுவையே ! தெவிட்டாத அமுதே !
தெய்வமணக் கிறிஸ்துவெனுந் திருக்குமர குருவே ! 6

—திரு. வி. கலியாணசுந்தரனர்

## குறிப்புரை

### I. இறை வணக்கம்

1. வால் - இளமை பொருந்திய, இழை - ஆபரணத்தை அணிந்தவள் (பார்வதி), ஒருவன் - ஒப்பற்றவன் (சிவபிரான்), முகிழ்த்தன - தோன்றின.

2. பஞ்சபூதம் - (பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும்) ஐம்பூதங்கள், புலன் - ஐம்புலன்கள், ஞாதம் - அறியப்பட்டது.

# II. முற்கால இலக்கியம்

## 1. பத்துப் பாட்டு

1. வசை இல் - குற்றமற்ற, வெண்மீன் - சுக்கிரன் (வெள்ளி), தளி உணவின் - நீர்த்துளியை உணவாக உடைய, தன் பாடிய புள் - தன்னைப் பாடிய வானம்பாடிப் பறவை, தேம்ப - உணவின்றி வருந்த, புயல் - மழை, மாறி - (பெய்வது) தவிர்ந்து, மலைத்தலைய - குடகு மலையை ஆரம்ப இடமாக உடைய.

2. ஒக்கல் - சுற்றத்தார், சாறு அயர் - விழாக் கொண்டாடும், தொக்காங்கு - திரண்டாற்போல, புலம் - நிலம், முட்டாச் சிறப்பு - குறைவு படாத சிறப்பு, பட்டினம் - (இங்குக்) காவிரிப்பூம்பட்டினம்.

## 2. எட்டுத் தொகை

### புறநானூறு

1. மாண்ட - மாட்சிமை பொருந்திய, நிரம்பினர் - அறிவு நிரம்பி உள்ளனர், யான் கண்டனையர் - என் விருப்பம் போல நடக்கின்றவர், அல்லவை - அறம் அல்லாதவற்றை.

2. தமியர் - தனிமையானவராய், துஞ்சல் - சோர்தல், நோன்தாள் - வலிய முயற்சி, உண்மையான் - இருத்தலாலே.

## 3. மணிமேகலை

கதிர்த்தானைக்கு - கிரணங்களாகிய சேனைக்கு, மருள் படு - இருள் சூழ்ந்த, தும்பி - வண்டு, கொளுத்திக்காட்ட - பொருத்திக்காட்ட, பொதும்பர் - இளமரச்சோலை, இலஞ்சி - நீர்நிலை, பாசடை - பசிய இலை, ஆலும் - ஆடும், கம்புள் - சம்பங்கோழி, முழவாக - மிருதங்கமாக, கொம்பர் - கொம்பு, துகள் - தூசு, வால் வெண் சுண்ணம் - தூய வெண்மையான சுண்ணம், மணிச்சிரல் - நீலமணி போன்ற சிச்சிலி என்னும் மீன்கொத்திப் பறவை, உருகெழு மீது ஊர் நீயான் - அச்சம் பொருந்திய மேலிடத்தே ஊர்ந்திருக்கின்ற மாலுமி, கூம்பு முதல் முறிய - பாய்மரம் அடியிலே முறியும்படி, வீங்கு பிணி - இறுகிய கட்டு, கால் பரிய - அறுபட, வயிறு பாழ்பட்டு - நடுவிடம் பாழாகி, இதை சிதைந்து ஆர்ப்ப - பாய் பீறுண்டு ஒலிப்ப, மயங்கு கால் எடுத்த வங்கம் போல - சுழல் காற்றினால் அலைக்கப்பட்ட மரக்கலம்போல, காழோர் - குத்துக்கோல்காரர், கையற - செயலற்று நிற்க, மேலோர் இன்றி - பாகர் இன்றி, பாகின் பிளவை - பாகன் அங்குசத்தால் குத்தி உண்டாக்கிய புண், பீடிகைத் தெரு - கடைத் தெரு, பெருங்கலக்குறுத்து-பெரியகலக்கத்தை உண்டாக்கி, பாகு - பாகன், பறை - பறையடிப்போர், ஆதுலமாக்கள் - வறியவர்கள், அலவுற்று - வருந்தி, காலவேகம் - யானையின் பெயர், களிமயக்குற்றென - மதங் கொண்டு திரிந்தபடியால், கடாத்திறம் - மதத்தை, கொடுஞ்சி - தாமரைப் பூ வடிவமாகப் பண்ணித் தேர்த்தட்டின் முன்னே நடும் உறுப்பு, காரலர்

கடம்பன் - கார் காலத்தில் அலர்கின்ற கடம்ப மலரால் தொடுக்கப்பட்ட மாலையை உடையவன் (முருகன்), மழை - மேகம், மதியம் - சந்திரன், கடைஇ - செலுத்தி, கார் - மேகம், பூம்பொழில் - அழகிய சோலை.

## III. இடைக்கால இலக்கியம்

### பாரத வெண்பா

1. படாம் - சீலை, நன்னுதலாள் - நல்ல நெற்றியை உடையவள் (குந்தி தேவி).

2. ஐவரையும் ஒன்றி - பஞ்ச பாண்டவரைச் சேர்ந்து.

3. பண் உலாம் - இசை பொருந்திய.

4. முன்னோன் - முன்னே பிறந்தவன் (தமையன்).

5. முடி கவித்து - முடி சூட்டி.

7. கோக்கோ - யான் கோக்கவோ, பொறுக்குகோ - யான் பொறுக்கவோ.

8. வடு - குற்றம், போவிட்டீர் - போக விட்டீர்.

9. தாமரையாள் - இலக்குமி.

10. கோறல் - கொல்லுதல்.

11. சரம் - அம்பு, விறல் - பகை, மலைந்தால் - போர் செய்தால், ஆகம் - உடம்பு.

12. வேகம் - நஞ்சுள்ள நாகாஸ்திரம், உது - இடையில் விடப்படுவதாகிய அஸ்திரம்.

13. ஏன்று - எதிர் நின்று, ஒட்டு - ஆணை, இருவர் - நகுல சகாதேவர்.

14. உற்று அழியா - ஏற்பட்டு அழியாமல், உலகு - உலகில்.

15. படி - பூமியில்.

16. வேண்டிற்று - விரும்பினது, அருத்துவீர் - அருந்தச் செய்வீராக.

17. பொன்றினல் - மடிந்தால், எம்பியர் - என் தம்பிமார், தீக்கடன் - ஈமக்கிரியை, நீர்க்கடன் - உதகக்கிரியை (எள்ளும் நீரும் இரைத்தல்).

19. மூத்தாய் - முதற்புதல்வனே, மட்டு - தேன்.

20. கோணகம் - (கோள் + நாகம்) தீய நாகாஸ்திரம்.

21. பட்டேன் - அழிந்தேன், பாதம் புரிகின்றேன் - தாளை விரும்பி வணங்குகின்றேன்.

22. குலையா - வருந்தி, நீர் ஆர - நீர் பொருந்த.

## IV. பிற்கால இலக்கியம்

### இரட்சணிய யாத்திரிகம்

சிலுவைப்பாடு - சிலுவையில் அறையப்படுதல்

1. வல்லானை - இயேசுநாதரை, எள்ளி - இகழ்ந்து.

2. ஆகடியம் - தகாதசொல், தெவ்வர் - பகைவர், கவ்வை - துன்பம்.

3. கல்வாரி - ஜெருசலேமுக்குப் புறம்பேயுள்ள மலை.
4. மறுகூடு - (மறுகு + ஊடு) வீதியில்.
5. மருங்கு - பக்கம்.
6. அறவும் - முற்றிலும்.
7. குடி போயது - குடி நீங்கியது, நரு - தேன், சிந்தாகுலம் - மனத் துயரம்.
8. மண்டு - மிகுந்த.
9. கரந்து - மறைந்து, சாம்பி - வதங்கி.
10. இப்பரிசு - இவ்வாறு.
11. குருசு - சிலுவை (Cross)

## V. அறவுரை

### 1. தினகரவெண்பா

1. ஏதிலார் - பகைவர், 3. இழுக்கல் - குறைபாடு.

### 2. இரங்கேச வெண்பா

1. பீடு - பெருமை, ஈடு தருமோ - ஒப்பாகுமோ?
2. ஆன்ற சபை - அறிஞர் நிரம்பிய சபை, ஏன்று - எதிர் நின்று, ஆக்கம் - பெறத்தக்க செல்வம்.

## VI. பல்சுவை

1. பிரம்படியின் புண் - சிவபெருமான் வந்தி என்னும் பிட்டு வாணிச்சிக்கு ஆளாகச் சென்று பாண்டியனுற்பட்ட பிரம்படியினுலுண்டான புண், வேடன் கொடுங்காலால் உதைத்த புண் - கண்ணப்ப நாயனுர் செருப்புக்காலையூன்றியதாலுண்டான புண், வில்லால் அடித்த புண் - அருச்சுனன் தவம் புரிந்த போது சிவபெருமான் வேடனுய்ச் சென்று போரிட அவன் வில்லால் அடித்த புண்.
2. கோடல் - கொள்ளுதல், முனியான் - வெறுப்பற்றவனுய், ஆர்வத்தன் - வேட்கையுடையவன், களன் - இடம்.
3. நஞ்சு - விஷம் (நைந்து), நாதர் - சிவபெருமான்.
4. ஆற்றின் பேர் - பாலாறு, நாற்காலது - பாலா (பாற்பசு), ஈற்று உயிர் நடப்ப - 'பாலா' என்பதன் இறுதியிலுள்ள லகர மெய்யின் மேலேறிய 'ஆ' என்னும் உயிர் நீங்க, பயன் - பயஸ் (பால்), செய்யுள்-பா.
5. வெங்காயம் - தீய உடம்பு, சுக்கானல் - மெலிந்தால், வெந்தயம் - புடமிட்ட அயச்செந்தூரம், சீரகம் - (சீர் + அகம்) சிறந்த மோட்ச வீடு, ஏரகத்துச் செட்டியார் - திருவேரகத்தில் உள்ள முருகக் கடவுள்.
6. குருதி - இரத்தம், நான் - நானென்னும் அகங்காரம்.

# உரைநடைப் பகுதி

## 1. கற்றுய்ந்தொழுகல்

[அஷ்டாவதானம்-வீராசாமி செட்டியார்]

**“ கற்க கசடறக் கற்பவை ; கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.”**

என்னும் குறளில், ‘ஒருவன் கற்க வேண்டும் நூல்களைப் பழுதறக் கற்கக் கடவன் ; அப்படிக் கற்ற பின் அக்கல்விக்குத் தகுதியாக அவைகளாலே சொல்லப்பட்ட வழியிலே நிற்கக் கடவன்,’ என்று திருவள்ளுவ நாயனுர் அருளிச்செய்தமையால், உலகத்தில் அருமையும் பெருமையும் ஆனதாய், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் பயனையும் அடைதற்குரியதாகிய மக்கட்பிறப்பிற்பிறந்தவர், பிறந்தும் பிறவாதவராய், விவேக சூனியத்தால் அறம் பாவம் என்பவைகளை அறியாத வேடர் போலவும், மிருகம் பறவை முதலிய உயிருள்ளவைகளும் மண் கல் முதலிய உயிர் இல்லாதவைகளுமாகிய அஃறிணை போலவும் நன்முயற்சி இன்றி வறிதிருந்து வாழ்நாள் கழியாமல், பிரதானமாகிய கல்விப் பொருள் செல்வப் பொருள் என்னும் இரண்டில் கல்விப் பொருளைத் தேடல் வேண்டும். கல்விப் பொருளாவது, செல்வப் பொருள் போல வெள்ளங்கொண்டு போகாததும், நெருப்பில் வேகாததும், கள்வர் அபகரிக்காததும், காவல் செய்ய வேண்டாததும், அரசர்களால் வௌவப்படாததும், தாயத்தாரால் பங்கிட்டுக்கொள்ள முடியாததும், விரும்பினவர்கட்கு எல்லாம் தடையின்றி வழங்கினுலும் மேன்மேலும் வளர்வதன்றிக் குறைவுபடாததுமாய், அஞ்ஞானமாகிய பிணிக்கு மருந்துமாயிருப்பதனுல், அதனைச் செல்வப் பொருளினும் சிறந்ததாகக் கருதி, ‘ இளமையிற்கல்,’ என்று ஔவை சொன்ன

[குறிப்பு : சிறிது காலத்துக்கு முன் தமிழ் உரை நடை எந்நிலையில் இருந்தது என்பதனை மாணவர் அறிதற்பொருட்டு இப்பாடம் சேர்க்கப்பட்டுள்ளது.]

வண்ணம் இளமைப் பருவத்திலேதானே உறுதியாக அவசியம் தேடல் வேண்டும்; தேடுங்கால், கல்வி வரையறைப்படாததனுல், அதனை முற்றக் கற்பதற்கு ஆயுள் நீடித்திராமையாலும், கற்பவர் சரீரமோ பிணிக்கெல்லாம் பிறப்பிடம் ஆகையாலும், முடியாமையால் கைவிட்டுவிடாமலும், அல்லது '**கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்,**' என்பதோர் சாமானிய வாசகத்தை நம்பிக் கண்டதெல்லாமாகிய மூடர்களுக்கேற்ற தந்தனப் பாட்டும் ரஞ்சனக் கூத்தும் உள்ளிட்ட புன்கல்வி கற்றுப் பொழுது போக்காமல், நீரைப் பிரித்துப் பாலைப் பருகும் அன்னப்பறவை போலச் சாஸ்திரங்களின் விசேஷ சாமானியங்களை யூகித்துச் சாராமிசந் தெரிந்து, இகபர சாதனமாய் எவற்றினும் விழுமிதாகிய மெய்ம்மைக் கல்வியையே உயிர்போல் பெரும்பொருளாக விரும்பி, இலக்கிய இலக்கண சம்பிரதாயந் தெரிந்த நல்லாசிரியரைத் தேடி அடைந்து, அவரது சந்நிதானத்திற் செல்வர்முன் வறியர் ஏக்கற்றிருப்பதுபோல இருந்து, குறிப்பறிந்து ஒழுகி, அவர் கருணை கூர்ந்து கற்பிக்க, முறை வழுவாமலும், நெறி பிறழாமலும், பேய் போலப் பேருண்டியை இச்சியாமலும், பெரியம்மை பிரசன்னமாணுற்போலப் பெருந்தூக்கம் தூங்காமலும், 'அம்பலம் தீப்பட்டது!' என்றுலும், 'அதைத்தான் சொல்வானேன், வாய்தான் நோவானேன்?' என்று கெட்டொழிந்த முழுச் சோம்பரைப் போலச் சோம்பியிராமலும், அனைவரும் தன்னைத் 'தம்பி பள்ளிக்கூடத்தான்,' என்று சொன்னுற்போதும் என்று நினைத்துப் பிரதிஷ்டைக்காகக் கழப்புவான் போல விளையாட்டினுல் கழப்பிவிடாமலும், பலகாலும் மிக முயன்று ஐயந்திரிபற அமையக் கற்க வேண்டும். அதன் மேலும், '**கேள்வி முயல்**' என்றமையால், உசிதமான பற்பல நற்கேள்வி கேட்க வேண்டும். அன்றியும், நுண்ணறிவுடையோர் நூல்கள் யாவையும் இனிதின் ஆராய வேண்டும். இவ்வாறு கற்றும் கேட்டும் ஆராய்ந்தும் பயின்ற பின்னர்க் குப்பையைச் சீத்து விலை உயர்ந்த மாணிக்கத்தை ஆராய்ந்தெடுப்பது போல உண்மை துணிந்து விலக்கத் தக்கவைகளை விலக்கி,

கொள்ளத் தக்கவைகளைக் கொண்டு அனுஷ்டிக்கவேண்டும். அனுஷ்டித்தலாவது, 'பார்மினோ! பார்மினோ!' என்று தாயுமானவர் உரைத்தவாறு, யாவரும், 'ஆ! ஆ! இவனைப் பாருங்கள்! பாருங்கள்! இவன் பாடிப் படித்துப் பிரசங்கிப்பது முக்கனியும், சர்க்கரையும், பாலும், தேனும் கலந்து ஊட்டுவது போல மிக இனிதாயும், அற்புதமாயும், விநோத சாதுரியமாயும், பகைவரும் வெறுக்கத்தக்கதன்றி வியக்கத்தக்கதாயும் இருக்கின்றதே! இவன் என்ன, சாரதா பீடமோ! கல்விக் கடலோ! கற்பனைக் களஞ்சியமோ! ஞானமணி விளக்கோ! அவதார புருஷனோ! உற்பாத-பிண்டமோ! அம்மம்ம! இவன் நிபுண சிரோமணியாய் இருக்கிறான்!' என்று தனது வித்தியா சாமர்த்தியத்தை மெச்சவேண்டும் என்னும் வீண் புகழை விரும்பலாகாது.

பின்னும், கல்வியில் தான் பிச்சையிட்டவர்களுக்கு உண்டென்று சொல்லும்படி பூரணமாகக் கற்றுணர்ந்த காலத்தும், பிறரை, 'இவன் நமக்கெவ்வளவு? அஜகஜாந்-திரம்,' என்று அவமதித்துக் கர்வியாமல், 'எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ!' என்று எண்ணித் தன்னிலும் அதிகமாகக் கற்றவர்களைக் கண்டால், 'நெய்விட்டு விளக்கும் தீபத்தை நீர்விட்டு விளக்குவதுபோல, இதுவரையில் நம்மை நாமே புகழ்ந்து வியந்தோமே! சகல கலா வல்லவராகிய இவரது கல்விக்கு நமது கல்வி எம்மாத்திரம்! சதாமிசத்தில் ஏகாமிசங் காணுமா? கால்வாய் கடலாமா? அணு மேரு-வாமா? துரும்பு தூணுமா? எறும்பு யானையாமா? முட்டிக்-காற் கழுதை பட்டவர்த்தனப் பரியாமா?' என்று அஞ்சிப் பெட்டிப் பாம்பு போல அடங்கியிருக்க வேண்டுமே அல்லா-மல், ஒருவருடனும் குதர்க்கம் செய்யலாகாது.

தன்னிடத்தில் கற்றவர்கள் கேட்டவர்கள் எல்லாம் அக்கல்வி கேள்விகளால் பெரும்பயன் அடைய, '**குங்குமஞ்-சுமந்த கழுதை**' போலத் தானொரு பயனும் அடையாமல், '**குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வது**' போல, நடத்தை கெட்டுத் திரியலாகாது. பர திரவியத்தை விஷம் என்று நினைக்க வேண்டுவதை விட்டு, ஊரார் உடைமைக்குப் பேராசை கொண்டு, மிதமில்லாமல்

கொள்ளேயிட்டு, '**தம்பி தெள்ளுமணி; திருட்டுக்கு நவமணி,**' என்று இகழப்படலாகாது.

'தன்னுயிர்போல மன்னுயிரையும் நினைக்கவேண்டும்,' என்னும் ஜீவகாருணியத்தை மறந்து, கொலை செய்து, பிரமஹத்தியாதி மகா பாதகங்களைத் தேடி, அநேக கற்பங் கடந்தாலும் கரையேறப்படாத மீளா நரகத்திற்கு ஆளாகல் ஆகாது.

"'அப்பா, என் கலியாணப் பந்தலிலிருந்து புளு-காதே!' என்ற பெரும்புளுகனும் இவனுக்கு இணை அல்லன். இவன் புளுகு அண்டகோளத்தையும் தூறிப் பாயும். ஆதலால், இவன் அண்டப் புளுகன்," என்று சொல்லும்படி பொய்யைப் பொருளாகக் கொண்டு மெய்யைக் கைசோர விடலாகாது.

கோபம் சண்டாளம் ஆகையால், அது கிருஷ்ண-சர்ப்பம் போலச் சீறி எழும்படி அதற்கிடங்கொடாமல், '**பொறுமை கடலிற்பெரிது,**' என்பதனுல், அதனைப் பூஷணமாகப் பூண்டுகொள்ள வேண்டும். சித்திரவதை செய்வது போல அடிக்கடி எவர்கள் என்ன தீங்கு செய்-தாலும் எதிர் செய்யாமல், அவர்கள் நாணும்படி அவர்களுக்கு நன்மையே செய்ய வேண்டும்.

எவ்வளவு அறங்களை அழித்தவர்க்கும் அப்பாவத்தி-னின்று நீங்கும் வழி உண்டு; ஒருவர் செய்த நன்றியை மறந்தவர்க்கோ, அது இல்லை. ஆதலால், அதனை மறவாது நினைக்க வேண்டும்.

எளியவர்களைத் திரணமாய் எண்ணி அவர்களிடத்தில் வேம்பு போல் கடுஞ்சொற்சொல்லாமல், தாழ்மையாய் எவர்களிடத்தும் இன்சொல்லே சொல்ல வேண்டும்.

பகைவர், சிநேகர், அயலார் என்னும் முத்திறத்தார்-களில் ஒருவர் பட்சஞ்சார்ந்து ஒரஞ்சொல்லாமல், துலாக்-கோல் போல நடு நிற்க வேண்டும்.

பறவைகளுக்குள் சண்டாளம் என்று இகழப்படுகின்ற அற்ப ஜந்துவாகிய காக்கைக்கும், காலையில் எழுந்திருத்தல், மாலையிற்குளித்தல், உற்ருரோடு உண்டல், உறவாடல் என்னும் நற்செய்கைகள் இருக்குமானுல், ஆறறிவினை

உடைய நன்மக்களுக்கு எப்படிப்பட்ட நற்குண நற்செய்கைகள் இருக்க வேண்டும்? அவைகள் எவ்வளவு அதிகமாகவும் இருக்க வேண்டும் ?

பிரபஞ்சத்தில் மூடர் விவேகியர் போலவும், மேலோர் கீழோர் போலவும் இருப்பர். அவர்களைக் கிளிஞ்சிலை வெள்ளி என்றும், மாணிக்கக்கல்லைக் காட்டுக் கல்லென்றும், ஒன்றை மற்றென்றாக மதிப்பது போலக் காட்சி மாத்திரத்தால் அவ்வாறு நிச்சயிக்கலாகாது. கரும்பு கோணி இருந்தாலும் தித்திக்குமல்லாமல் கசக்காது என்றும், காஞ்சிரங்காய் சிவந்து கனிந்திருந்தாலும் கசக்குமல்லாமல் தித்திக்காது என்றும், அம்பு வளைவின்றி ஒழுங்காய் இருந்தாலும் கெட்ட செய்கையே உடையது என்றும், வீணை ஒழுங்கின்றி வளைந்திருந்தாலும் நல்ல செய்கையே உடையது என்றும் பகுத்தறிவது போல, அவரவர்களுக்கு இயற்கையும் செயற்கையுமாய் உள்ள குணங்களையும் செய்கைகளையும் பகுத்தறிய வேண்டும். அங்ஙனம் பகுத்தறிந்து, ஒருவனைக் கொட்டிவிட்டு அவனைப் பதைத்துத் துடித்து வருத்தப்படச் செய்யும் தேள் போலப் பிறனுக்குத் துன்பத்தை உண்டாக்கி அவன் அதைச் சகிக்க மாட்டாமல் வியசனப்படச் செய்கின்றவர்களும், ஒருவன் உண்ணும் சோற்றில் விழுந்திறந்து அவனுடைய வயிற்றுக்குட்போய் அவனுடைய சோற்றை அவனுக்கு உதவாமல் போம்படி செய்யும் ஈயைப் போலப் பிறனது செல்வம் கண்டு பொறாமை கொண்டு தான் அவன்பொருட்டு இறந்தாவது அந்தச் சொத்தை அவன் அனுபவிக்க ஒட்டாமல் செய்கின்றவர்களும், ஒருவனைக் கடித்து விஷம் தலைக்கேறுதலால் அவன் இறந்து போம்படி செய்யும் பாம்பு போலப் பிறனைப் பகைத்து அவனுக்குத் தீங்கு விளைத்து அவனை முடித்துவிட்டு மகிழ்கின்றவர்களும் முதலாகிய தீயோரை நேசிக்கலாகாது.

ஆடை சோர்ந்த பொழுது உதவி செய்கின்ற கையைப்போல நேசனுக்கு ஆபத்து வந்த பொழுது தாமே அறிந்து உதவி செய்கின்றவர்களும், கொல்லன் உலைக்களத்தில் வேகின்ற இரும்புடனே வேகும் உலையாணிக்கோல் போலச்

சினேகன் உபத்திரவப்படும் பொழுது, 'நமக்கு என்ன!' என்றிராமல், அவனுடனே தாமும் அவ்வுபத்திரவத்தை அனுபவிக்கின்றவர்களும், **கண்டியூர்ச் சோழ ராஜனுடைய** மந்திரியாராகிய **சீனக்க முதலியாரை** நேசித்து, அவர் இறந்து காஷ்டத்தில் வைக்கப்பட்ட பொழுது 'என் சினேகிதரைப் பிரிந்து நான் இருக்கச் சகியேன்!' என்று அவருடனே கூடவே அந்தக் காஷ்டத்தில் படுத்துக்கொண்டு சோழன் முதலியவர்கள் விலக்கியும் கேளாமல் நெருப்பில் விழுந்து பிராணனை விடுத்துச் சினேக தருமத்தை நிலைநிறுத்திய **பொய்யாமொழிப்புலவர்** போல்பவரும் ஆகிய நல்லாரையே நேசிக்க வேண்டும்.

இன்னும், மனோ வாக்குக் காயங்களை எக்காலும் நல்விஷயத்திலேயே பயிலும்படி செய்ய வேண்டுமல்லாமல், துர்விஷயத்தில் பிரவேசிக்க விடலாகாது. இனி இப்படிக்கன்றி, விபரீதத்தால், "அட போ! இதென்ன பைத்தியம்? பாவம் ஏது, புண்ணியம் ஏது? நரகம் ஏது, சுவர்க்கம் ஏது? நாம் செத்தால், சரீரம் பஞ்சபூத சம்பந்தப்பட்டதாகையால், இது மண்ணோடு மண், நீரோடு நீர், நெருப்போடு நெருப்பு, காற்றோடு காற்று, வெளியோடு வெளியாய்ப் போய்விடுகின்றதே! அப்புறம் மோக்ஷம் நரகம் அடைவது ஏது? தெய்வம் என்றதுதான் ஏது? முயற்கொம்பும் மலடி புத்திரனும் போலச் சூனியமே அல்லாமல், கண்டவர்கள் யார்? இந்தக் கொள்ளைக்கு ஸ்நானம் ஏன்? தியானம் ஏன்? ஞானம் ஏன்? தான தருமங்கள் ஏன்? இவையெல்லாம் வீண் ஆரவாரம். கண்டதே காட்சி. கொண்டதே கோலம். மனம்போன போக்கே சரி," என்று நாஸ்திகம் பேசிச் செருக்குற்றுப் பட்டி மாடாய் உழலாமல், 'அண்டரண்ட அகில சராசரங்களையும் படைத்துக் காத்து அழிக்கின்ற காரணக் கடவுள் ஒன்று உண்டு,' என்று அனுமான உபமான ஆகமப் பிரமாணங்களால் நிச்சயமாக நம்பி, அக்கடவுளை மனமாரச் சிந்தித்து, நாவார வாழ்த்தி, முடியார வணங்கி, ஆராதித்து, பெரியோரைப் பேணி, அரசர் ஆணைக்கு அமைந்து, மாதா, பிதா, குரு முதலானவர்களைப் பூசித்து, மற்றச் சுற்றத்தாரையும் தழுவி, வறியவர்க்கு இரங்கி, வாசா கயிங்கரிய

மாத்திரமாய்ப் போய்விடாமல், கூடிய அளவும் உபசரித்துச் சம்ரக்ஷணை செய்வதற்குச் செல்வப் பொருளையுந் தேடல் வேண்டும். அதனைத் தேடுங்கால், ‘இதனைப் பிறரிடத்துச் சென்று அபிமானமாகிய பூஷணத்தைத் துறந்து எய்த்து நின்று இரத்தலும், பிறரை மோசம் செய்தலும், பொய்ச் சாட்சி சொல்லிப் புணைபட்டுக் கைக்கூலி வாங்குதலும் முதலாகிய பாவத் தொழிலைச் செய்தால் அன்றித் தேடக் கூடாதே,’ என்றெண்ணி, அப்படிச் செய்யாமல், பழிக்கஞ்சி, நிலத்தைத் திருத்தி, உழுது பயிரிட்டாவது, நாநா விதப் பண்டங்களைக் கொண்டு அவைகளை மாறி வியாபாரஞ் செய்தாவது, ‘அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்,’ என்றதனால், சுய பாஷையே அன்றிப் பாஷாந்தரங்களையும் பயின்று, ராஜாங்கத்தைச் சார்ந்து அரசர்கள் தயையைப் பெற்று விவேக கோசரத்தாற் பல வித உத்தியோகங்களைச் செய்தாவது, மற்றும் எவ்வித நன்முயற்சியாலாவது மெய் வருந்திச் சம்பாதிக்க வேண்டும்.

அப்படித் தக்க வழியில் சம்பாதித்த கஷ்டார்ச்சிதமாகிய சுவார்ச்சிதத்தையாயினும், அதனோடு பிதிரார்ச்சிதத்தையாயினும், அநியாயார்ச்சிதமாம்படி சூதாடித் தோற்காமலும், துர் வியாச்சியத்தில் அழித்துவிடாமலும், வறிதே புதைத்து வைத்துப் பின் இழந்து போகாமலும், இல் வாழ்க்கைக்கு நல்ல துணையாகிய கற்புடை மனையாளோடும் கூடி, மனம் ஒத்துத் துறந்தார் முதலிய பதின்மருக்கும் பகிர்தலாகிய தான தருமங்களைச் செய்து, தாமும் அனுபவித்து, இம்மை இன்பம் துய்த்து, புகழ் பெற வாழ்ந்து, மறுமை இன்பம் அடைதற்கேற்கப் பொறி புலன்களை விஷயாகாரமாம்படி சுயேச்சையாக விட்டுவிடாமல் அடக்கி, வேதாகமங்கள் உரைத்த வண்ணம் நெறி தவறுது ஒழுகல் வேண்டும் என்பதே.

இங்கிலீசுகாரர், சிறு பிள்ளைகள் பாஷையின் எழுத்து முதலியவைகளை வருத்தம் இன்றி எளிதாக விளையாட்டில் தாமே உணர்ந்துகொள்வதற்குப் பல விதச் சித்திரப் படங்களை வேடிக்கையாகத் தீட்டிக் காட்டுவது போல, உலகத்தில் கல்வி பயிலும் சிறுவர் முதலாயினோர் அருமை

இன்றி எளிதாக வாசித்துச் சிறந்த கல்வியைக் கற்பதும், அதனை ஆராய்வதும், கற்ற கல்விக்குத் தக்க வண்ணம் நடப்பதுமாகிய கற்ருய்ந்தொழுகலை இவ்விதமாம் என்று படம் எழுதிக் காட்டாவிடினும், இதனுல் இடர்ப்படாமல் ஒருவாறு உணர்ந்துகொள்ளும்பொருட்டு இது அச்சிறுவர் முதலாயினோர்களுக்குச் சிரிப்பும் பரிகாசமுமாய்த் தோன்றியே உபாயமாக மேற்குறித்த பெரும்பயனைத் தரும்படி பல பழமொழி முதலாகிய திருஷ்டாந்தங்களைக்கொண்டு வெளிப்படையாகவும் சுருக்கமாகவும் செய்யப்பட்டமையால், "இது ஆருக்குத் தெரியாது? இதில் என்ன அருமை இருக்கின்றது? இதுவும் ஓர் அதிசயமா?" என்று வரன்முறையே கற்றுணர்ந்த சான்ருேர் ஒரு பொழுதும் நினையார் என்னும் துணிவு பற்றி இதனை வெளியிடலானேன்.

# 2. இலக்கியம்

[திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார்]

நமது தீவிய செந்தமிழ் வளநாட்டிலே அளவிறந்த புலவர் பெருமக்கள் தோன்றி, அரும்பெருங்கருத்துக்களை-யுடைய இனிய பாக்களைச் சொற்சுவை பொருட்சுவை ததும்பப் பாடி வைத்தார்கள். அவர்கள் மக்கள் இயல்பை முற்றும் தங்கள் கூரிய சீரிய அறிவால் அறிந்து, கேட்போர் உணர்வு வயப்படுமாறு இனிது சொல்லிய திறன் பெரிதும் பாராட்டற்பாலது! செய்யுட்டிறத்தில் நம் செந்தமிழ் மொழியிலே யாதொரு குறைபாடும் இலது. ஆனால், உரைத்திறத்திலோ எனின், இலக்கியச் செறிவு பொருந்திய நூல் யாதும் இல்லை என்றே கூறலாம். நாம் உரையைப் பல வகையானும் வளர்த்தல் வேண்டும். அப்பொழுதுதான் நமது தமிழ்மொழி பொது மக்கள் அனைவருக்கும் நன்கு பயன்படுவதாகும். நூலுரைகளாய் உள்ள களவியிலுரை முதலியன, உரை இலக்கியம் எனச் சொல்லப்படா. ஏனெனின், அவை நூலின் பொருளைக் கூறுகின்றவன்றி, தாமாகவே ஒன்றைக் கூறுவன அன்மையின் என்பது. இனிப் பிற்காலத்தே தோன்றிய சிற்சில உரை நூல்களுள்ளும் இலக்கியப் பொலிவு வாய்ந்து திகழ்பவை இறப்பவும் சிலவே. ஆதலின், நாம் உரைநூல் செழுமையுற்று வளர்வதற்குப் பெருமுயற்சி செய்தல் வேண்டும். பல திறப்பட்ட உரை நூல்களைப் புலவர்களைக்கொண்டு எழுதுவித்தல் வேண்டும். பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்து வெளியிடுதலும், உரையை வளர்ப்பதற்குரிய வழிகளில் ஒன்று ஆகும். மேனாட்டார் உரைநூல்களிற் பெரும்பான்மையன ஆராய்ச்சி நூல்களே. நாம் நமக்கு ஆரமுதம் போலச் சிறந்து விளங்கும் **சிலப்பதிகாரம், சிந்தாமணி, திருக்கோவையார், பெரிய புராணம், இராமாயணம்** முதலிய நூல்களையும் பல ஆராய்ச்சி முறைகளைக்கொண்டு செவ்விதாக ஆராய்ந்து எழுதுவோமாயின், அவை உரைநூல்களாய் மிளிர்தலோடு, ஆராய்ச்சி நூல்களாகவும் சிறக்கும் என்பதில் சிறிதும்

ஐயமில்லை. அத்தகைய ஆராய்ச்சிக்கு உபகாரப்படுமாறு ஆங்கில நன்மக்கள் முறைமையினை மிகுதியுந் தழுவி **இலக்கியம்** என்னும் பொருள்பற்றி இக்கட்டுரையை எழுதுகின்றோம். 'நாம் நல்லனவற்றைப் பிற மொழிகளினின்றும் எடுத்துக்கொள்வதில் இழுக்கொன்றுமில்லை. அது நம் தொல்லாசிரியர் இட்ட நல்லாணையுமாம்,' என்பது, '**தொகை, வகை, விரி, மொழிபெயர்ப்பு** என நான்கு வகையாக நூல் செய்தற்பாற்று,' என அவர் வரையறுத்துக் கூறியதானும் தெரியப்படும்.

## இலக்கியம் என்பது யாது?

'இலக்கியம் என்பது யாது?' என முதற்கண் ஆராய்வோம்: இலக்கியம் என்னும் சொல் வடசொல்லின் திரிபு ஆகும். அதற்கு வடமொழியிலே 'இலக்கணையால் பொருள் கொள்ளக் கிடப்பது,' என்பது பொருள். இலக்கணை என்பது, கங்கைக் கரையின்கண் வேடச்சேரி என்புழிக் கங்கை வெள்ளத்தை உணர்த்தாது, அதன் கரையை உணர்த்துவதாகிய ஒரு வகை இலக்கண விதி. இது தமிழிலே ஆகுபெயரின்கண் அடங்கும். அளவை நூலார், 'இலக்கணத்தாற் காரியப்படுவது இலக்கியம்,' என்பர். தமிழ் நூலாரும், 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம்' என்பர். சைனப் புலவரோ, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலிய ஐம்பெருங்காப்பியங்களையும் இலக்கியம் என்பர். ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'பாரதம், இராமாயணம் போல்வன இலக்கியம்,' என்றனர். உலக வழக்கில் 'இலக்கியம்' என்ற சொல் **அந்தாதி, கலம்பகம், கோவை, உலா** முதலிய நூல்கட்கெல்லாம் பொதுவாக வழங்கி வருகிறது. **செய்யுள் வழக்கு, உலக வழக்கு** என்னும் இருவகை வழக்கின் ஆற்றலையும் கூர்ந்து நோக்கி இலக்கியம் என்பது இன்னதுதானென ஒருவாறு துணிவோம்:

நிகண்டு நூல்களையும், இலக்கண நூல்களையும் ஒருவரும் இலக்கியம் என்று கூறுவதைக் காண்கிலம். அது போன்றே, மருத்துவம், சோதிடம், சாத்திரம் முதலிய-

வற்றையும் இலக்கியம் என்று கூறலாகாது. ஏனெனின், இவை ஒரு பகுதியாருக்கு மட்டும் பயன்படுவனவன்றி, மக்கட்பரப்பிற்கு ஒருங்கே பயன்படுதல் இன்மையின் என்க.

இனி, ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'இராமாயணம், பாரதம் போல்வன இலக்கியம்,' என்றதை நோக்குழி, இலக்கியத்தைப்பற்றி அவர் கொண்ட கருத்தும் அதுவேயாதல் துணியப்படும். அங்ஙனமே எல்லார்க்கும் ஒப்பப்பயன்படுதல் நோக்கியே சமணப் புலவரும், ஐம்பெருங்காப்பியங்களை இலக்கியம் என்று கூறினராதல் வேண்டும். இக்கருத்தே பற்றி அந்தாதி கலம்பகம் முதலியனவும் இலக்கியமாவான் செல்லும்.

இதுகாறும் கூறியவற்றான் இலக்கியம் என்பது, முதன்முதல் மன்பதைக்கெல்லாம் பொதுவாகப் பயன்படுதலான பொருளையுடைத்தாய் இனிய வகையிற்சொல்லப்படுவதாய் இருத்தல் வேண்டும் என்பது பெற்றாம். **சிவஞான போதம்** முதலிய சாத்திர நூல்கள் எல்லாம், அரிய பெரிய தத்துவ ஞானத்தைப் புகட்டுமேனும், அவை நிகண்டு இலக்கணம் முதலிய கருவி நூல்களைக் கற்றுப் புலமை மிக்குப் பிறவிக்கஞ்சி வீடு பேற்றை அவாவி நிற்கும் ஒரு சிலர்க்கன்றி எல்லார்க்கும் பயன்படாமையினால், இலக்கியம் ஆகா. அவை சாத்திரம் எனவேபடும். சாத்திரம் ஒரு வகைப் பொருளை ஒரு சாராருக்கு உணர்த்தும் பகுதியிலே முனைந்து நிற்க, இலக்கியம் எல்லார்க்கும் ஒப்பப் பயன்படும் பொருளை எல்லார் அறிவிற்கும் எட்டுமாறு இனிய வகையில் எடுத்து மொழிவதிலேயே தலைதூக்கி நிற்கும் என வேறுபாடு கண்டுகொள்க.

இலக்கியத்திற்கு மற்றொரு தன்மையும் இன்றியமையாது வேண்டப்படும். அஃதாவது, இலக்கியம், சொற்கட்டுச் சிறந்து இன்பம் படைத்தலைக் குறிக்கோளாகப் பெற்றிருத்தல் வேண்டும். நாம் ஓர் அழகிய ஓவியத்தைக் கண்டு உவகை கூர்கின்றோம். அவ்வுவகை ஏன் நமக்கு உண்டாயிற்று என்று ஆழ்ந்து நினைத்துப் பார்ப்போம். ஓவியம் ஓர் ஒழுங்கில் அமைக்கப்பட்டதாய் எங்கெங்கு எவ்-

வெவ்வாறு கோடுகள் அல்லது நிறங்கள் ,பொருந்த வேண்டுமோ, அவ்வவ்வாறு பொருந்திக் கண்ணைக் கவர்தலின், நமக்கு இன்பவுணர்ச்சி பிறக்கிறது. அது போலவே, நல்லிசைப் புலவர் பாடிய ஒரு செய்யுள் எடுத்துக்கொண்ட பொருட்கேற்பச் செஞ்சொற்களால் முறைமையாய்த் தொடுக்கப்பட்டு, யாப்பியல் வழுவாது நிற்றலின், நம் உள்ளத்தே இன்பத்தைத் தோற்றுவிக்கின்றது. இன்னோரன்ன தன்மையால், இலக்கியம் எனப்பட்டவை யாவும் சொல்லின்பம் பொருளின்பங்களுக்குரிய தன்மைகள் வாய்ந்திருத்தல் வேண்டுமென்பதும் பெறுதும். எனவே, மிகச் சிறந்த பொருளும், செவ்விதாகச் சொல்லப்படாவிடின், அஃது இலக்கியம் எனப்படாது என்பது புலப்படும். ஆதலின், இலக்கியம் மன்பதைக்கெல்லாம் ஒப்பப் பயன்படும் பொருளை உடையதாய்ச் சொல் வகையில் இனியதாய்ச் சொல் வடிவம் முதலியவற்றான் சிறந்து இன்பம் பயத்தல் வேண்டும் என்பது துணியப்பட்டது.

## இலக்கியமும் வாழ்க்கையும்

இனி, இலக்கியங்களைக் கற்றலால் நமக்கு இன்பம் உண்டாவதற்குக் காரணம் யாதென்பதை ஆராய்வோம்: இலக்கியம் எல்லாம், மக்களுக்கு இன்றியமையாது வேண்டிய உறுதிப் பொருள்களை எடுத்துக் கூறுகின்றன. அவற்றைப் படிக்குந்தோறும் நமது வாழ்க்கையின் பல பகுதிகளையும் அறிகின்றோம். **சீதா பிராட்டியார்** அசோக வனத்திலே தங்கிப் பன்னெடு நாட்களாகத் துன்பமுற்று, இராமபிரானைப்பற்றி யாதொன்றும் அறிய முடியாதவராய், 'இராமபிரான் நமது இருப்பிடத்தை அறிந்துள்ளாரோ, இல்லையோ!' என்றும், 'அறிந்தும் பகைவரால் கைப்பற்றப்பட்டமையின், நம்மை மீட்சி செய்தல் தகாதெனக் கருதினரோ!' என்றும் பலப்பலவாறு தமது பெண்மைக்கியைந்தன எண்ணியெண்ணி மனம் புண்பட்டு, உய்யும் வகை காணாராய், உயிரைத் துறக்கத் துணிந்து, குருக்கத்திக் கொடிக்கருகே செல்லுதலும், அனுமான் இராமபிரான் நாமத்தைச் சொல்லிக்கொண்டு விரைந்து ஓடிச்சென்று

அவரையணுகிய போது, அரக்கர் வஞ்சனைகளையறிந்த பிராட்டியார், 'இவ்வாறு வருகின்றவன் அரக்கன்தானே! அன்றி யாவனோ!' என்று முன்னே ஐயுறவு கொண்டு, பின்னர்த் தம் ஆருயிர்க்காதலரின் திருநாமத்தைச் சொல்லினனாதலின், அவன் யாவனாயினும் அந்நிலையில் தம் உயிரைத் தந்த உத்தமன் ஆயினனென உவகை கூர்ந்து, அவனை யார் என வினவுதலானார் என்னும் வாழ்க்கைப் பொருளைக் கல்வியிற்பெரிய **கம்பர்**,

> 'அரக்கனே யாக! வேறோ ரமரனே யாக! அன்றிக்
> குரக்கினத் தலைவ னேதா னாகுக! கொடுமை யாக!
> இரக்கமே யாக! வந்திங் கெம்பிரான் நாமஞ் சொல்லி
> உருக்கின னுணர்வைத் தந்தான்; உயிரிதி னுதவி யுண்டோ?'

என்னும் செய்யுளால் நம்முள்ளத்தே நன்கு பதியும் வண்ணம் இனிது கூறுதலின், நாம் மகிழ்ச்சியில் துளும்புகின்றோம். ஏனெனின், வாழ்க்கையின்கண் கணவனைப் பிரிந்து வருந்-தும் மனைவியின் வருத்தம் முதலியன நமக்கு அனுபவமான பொருள்களாதலின் என்க. இவ்வாறன்றி, உலகவாழ்க்கையிற்-காணப்படாத பொருள்களை எத்துணை ஆற்றலுடன் கூறினும், அவை நமக்கு இன்பம் பயப்பனவாகா, அவை நம் அனுபவத்துக்கு அப்பாற்பட்டவையாதலின். ஆகவே, எல்லா இலக்கியங்களும் உலகவாழ்க்கையைத் தெள்ளத்-தெளிய எடுத்துரைப்பனவேயாகும். எவ்வெவ்விலக்கியங்கள் வாழ்க்கையை வழுவா வகை எடுத்துக்கூறும் கூற்றிலே சிறந்து திகழுமோ, அவ்வவ்விலக்கியங்களே தலையாய இலக்கியங்கள் எனக் கருதப்படும்.

இனி, இப்பொருளையே சொல்லாற்றல் இல்லாதான் ஒருவன் கூறின், அது நமது கருத்தைக் கவர்தலின்றாகும். ஆதலின், நாப்புலமை வாய்ந்த புலவர் கலைத்திறம் பொருந்தப் பொருளைப் புகட்டுவதால் மட்டுமே நம்முணர்வு கவரப்படும் என்க. செந்நாப் புலவர்க்கே இன்ன பொருளை இன்னின்ன சொற்களால் இன்னின்னவாறு இன்னின்ன காலத்திற் சொல்ல வேண்டும் என்னும் தன்மை நன்கு விளங்கும். அஃது அரிதாகும். இத்தகைய குணங்களிற் சிறந்து

நிற்போரே பெரும்புலவர் எனப்படுவர். அவர்தம் கவியைக் கருதியே போலும் கம்பர் பின் வரும் செய்யுளைச் சித்திரிப்-பாராயினர் !

‘ புவியினுக் கணியா யான்ற பொருடந்து புலத்திற் றாகி
அவியகத் துறைக டாங்கி யைந்திணை நெறிய ளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமுந் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா விரியினை வீரர் கண்டார்.’

# 3. கூட்டுறவுச் சங்கங்கள்

[டாக்டர் பா. நடராசனுர், M. A., D. Litt.]

நம்நாடு தொழில் வளர்ச்சி அடையாத நாடு. ஆயினும், தொழில் வளமிக்க நாடு என்று சொல்லிக்கொள்ளும் பல நாடுகளைவிட நம்நாட்டில் கூட்டுறவு இயக்கம் நன்கு வளர்ச்சி அடைந்திருக்கிறது.

'பராமரிப்பு ஆட்சிவந்து, மக்கள் சுய முயற்சிக்கு இடமின்றி அரசாங்கமே எல்லாவற்றையும் செய்துவிடும் பொழுது கூட்டுறவு இயக்கம் வலியிழக்கிறது,' என்று **ஆஷ்பி** கூறினுர். இந்தப் பொதுவான தத்துவத்தை மேலும் விரிவாக விளக்குவாராஞல், அவர் இதைப் பல நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்துவார். அப்படியன்றி, இதையே முடிவானது என்று அவர் கருத மாட்டார் என நான் நம்புகிறேன்.

இந்தியாவைப் பொறுத்த வரை சென்ற சில ஆண்டுகளாக, மக்களின் நன்மையே நாடும் சர்க்காரின் நிகழ்ச்சிகள் விரியவிரியக் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி எந்த விதத்திலும் தடைப்பட்டதாகத் தெரியவில்லை.

**வேகமான முன்னேற்றம் :** இந்தியா சுதந்தரம் அடைந்தவுடன் சுதந்தர அரசியல் திட்டத்தை உருவாக்கும் தலைவர்கள் தேச பிதா **மகாத்துமா காந்தியடிகளின்** இலட்சியத்திற்கிணங்கக் கூட்டுறவுப் பொதுச் சாம்ராஜ்யம் அமைப்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளார்கள்.

சென்ற மூன்றுண்டுகளாக மாகாண, மத்திய அரசாங்கங்களில் காங்கிரஸ் பதவி ஏற்றதிலிருந்து கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு வேண்டிய ஊக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது மகாயுத்தத்திற்குப் பின்னர் இந்தியாவிற் கூட்டுறவு இயக்கம் எவ்வளவு வேகமாக முன்னேறி வருகிறது என்பதைக் காட்டுவதற்குச் சில புள்ளி விவரங்கள் இங்குத் தருகின்றேன் :

**விவசாயக்கடன் உதவிச்சங்கங்கள் :** கூட்டுறவு விவசாயக் கடன் உதவிச்சங்கங்களின் எண் 1938-39-ஆம் வருடத்தில் 93,800 ஆய் இருந்தது. 1945-46-ஆம் ஆண்டில்

124,200 ஆய் உயர்ந்துவிட்டது; அதாவது, சுமார் 35 சத வீதம் அதிகரித்திருக்கிறது. இக்கூட்டுறவு விவசாயச் சங்கங்களின் எண் அவ்வாண்டுகளில் 11,500 லிருந்து 22,800 ஆகச் சுமார் 100 சத வீதம் அதிகரித்திருக்கிறது. கூட்டுறவு விவசாயக்கடன் உதவி, இதரக் கூட்டுறவு விவசாயங்கள் ஆகிய இரண்டும் சேர்ந்து 105,300 லிருந்து 147,000 ஆகச் சுமார் 40 சதவீதம் உயர்ந்திருக்கிறது.

**சென்னை மாகாணத்தில் கிராமாந்தரச் சங்கங்கள்:** சென்னை மாகாணத்தில் 1938-39ல் இருந்த 21 கிராமக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், 1946-47க்குள் 1132 ஆக வளர்ந்துவிட்டன; இந்த ஆண்டுகளில் அங்கத்தினர் தொகை, 288 லிருந்து 2,49,000 ஆகவும், 'வழங்கப்பட்ட மூலதனம்' ரூ. 17,000 லிருந்து ரூ. 53,29,000 ஆகவும் உயர்ந்திருக்கின்றன. விற்பனை ரூ. 3,51,000 லிருந்து ரூ. 480,00,000 ஆகச் சுமார் 137 மடங்கு அதிகரித்திருக்கிறது. உபயோகிப்பவர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு மார்கெட்டிங் சங்கங்கள் ஆகிய இரண்டு வகைப்பட்ட சங்கங்களுங்கூட இத்தகைய விரிவான வளர்ச்சியை அடைந்துள்ளன.

**சர்க்கார் உதவி:** அரசாங்கம் பல வகைகளில் இவற்றிற்கு உதவியுள்ளது. எல்லாத் துறைகளிலும் கூட்டுறவு நிலையங்களுக்கு முதலிடம் கொடுத்து உற்சாகம் அளிக்கப்பட்டுள்ளது. தானியச் சேகரிப்பானது கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் கூட்டுறவுச்சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்து புதிய கூட்டுறவுச்சங்கங்களை அமைக்க உதவி செய்கிறார்கள். மது விலக்குச் செய்துகொண்டு வரப்பட்டுள்ள சென்னை மாகாணத்தில் பொது நலப் பணிகள் கூட்டுறவுத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவை தவிரக் கூட்டுறவு நிலையங்கள் அரசாங்கத்தாரிடமிருந்து பல வித நன்மைகளையும் சலுகைகளையும் அடைந்திருக்கின்றன.

**தேவையில் ஒரு பகுதி மட்டுமே:** இத்தனை சலுகைகளையும் உதவிகளையும் பெற்றிருந்தும், இந்தக் கூட்டுறவு இயக்கம் விவசாயக் கடன் சுமையைக் குறைப்பதில் பெரிய

அளவில் வெற்றி பெறவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். விவசாயக் கடன் சுமை, எளிதில் தீர்க்க முடியாத பெரியதொரு பிரச்சினையேயாகும். ஓர் உதாரணம் கூறுகிறேன்: சென்னை மாகாணத்தில் ஒரு வருடத்தில் விவசாயச் செலவுக்கு வேண்டிய தொகை ரூ. 200 கோடியாகும். ஆனால், சென்னை மாகாணத்திலுள்ள கூட்டுறவு விவசாயக் கடனுதவிச் சங்கங்கள் கொடுக்கும் தொகை ரூ. 6 கோடிதான்; அதாவது, மொத்தத் தேவையில் 3 சத வீதமேயாகும். விவசாயத் தொழிலை நடத்துவதற்கு இந்தியா முழுமைக்கும் ஆண்டொன்றுக்குச் சுமார் ரூ. 1,520 கோடி வேண்டியிருக்கிறது. ஆனால், கூட்டுறவு இயக்கம் கடனாகக் கொடுக்கக் கூடியதெல்லாம் சுமார் ரூ. 40 கோடிதான். இது மொத்தத் தொகையில் 2·6 சத வீதமேயாகும். கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டு 45 வருடங்களாகியும் இந்த நிலையிலேதான் இருக்கிறது.

**' ரெய்பீஸன் ' சங்கங்கள் :** ஆங்கிலேய அதிகாரிகளில் திறமை வாய்ந்தவரும் சிறந்தவருமான **சர் பிரடரிக்கு நிக்கல்ஸன்,** சென்ற நூற்றாண்டின் இறுதியில், " **ரெய்பீஸன்** கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுங்கள்; உங்கள் குறை தீரும்," எனக் கூறிச்சென்றார்; இந்தியாவின் பொருளாதாரத் துயரங்கள் யாவும் அவற்றால் ஒழியும் என்று எண்ணினர். நாம் ரெய்பீஸன் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவினோம். காலமும் அரை நூற்றாண்டு கழிந்துவிட்டது. ஆனால், நாம் கண்ட முடிவு, " ரெய்பீஸன் கூட்டுறவுச் சங்கங்களைக் காண்பது மட்டும் போதாது," என்பதுதான்.

" ஒரே துறையில் வேலை செய்யும் சங்கம் திறமையாகவும் இலாபகரமாகவும் நடைபெறலாம்; ஆனால், அது மக்களிடையே கூட்டுறவு சமுதாய உணர்ச்சிகளை ஊட்ட முடியாது," என மிக அழகாகக் கூறினார் ஆசிரியர் **ஆஷ்பி.** இஃதுஇந்தியா அறிந்துகொண்ட உண்மையே. பிறநாடுகளைக் காட்டிலும் இந்தியாவில் வெவ்வேறு துறைகளில் சங்கங்கள் ஈடுபட்டு விருத்தி அடைந்திருக்கின்றன. விவசாயக் கடனுக்கென்றும், வீடு கட்டுவதற்கென்றும், விளைபொருள்கள் விற்பனைக்கென்றும், வாழ்க்கைக்கு அவசியமான பொருள்-

கள் வாங்குவதற்கென்றும் இங்குத் தனித்தனி சங்கங்கள் நிறுவப்பட்டு வளர்ந்து வந்திருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நோக்கம் உண்டு; கடனுதவிச் சங்கங்களின் நோக்கம், குறைந்த வட்டி; வீடு கட்டும் சங்கங்களின் நோக்கம், குறைந்த தொகைத் தவணை; விற்பனைச் சங்கங்களின் நோக்கம், அதிக டிவிடெண்டு. இப்படியாக இதுகாறும் திறமையிலும் வியாபார முறைகளிலும் அதிக கவனம் செலுத்தினர்களே தவிரக் கூட்டுறவு உணர்ச்சி வளர்வதற்கான ஏற்பாடுகள் செய்வதில் மக்கள் போதிய கவனம் செலுத்தவில்லை.

**'பல துறைச்' சங்கங்கள் தேவை :** இதை அறிந்து-தான் காங்கிரஸ் அரசாங்கம் கூட்டுறவு இயக்கத்தில் ஒரு புதிய நோக்கத்தை ஏற்றுக்கொண்டு **பல துறைக் கூட்டுறவுச் சங்கங்களை** (Multi-purpose) நிறுவ ஏற்பாடு செய்திருக்-கிறது. ஒரு கிராமத்துக்கோ, ஒரு கிராமத் தொகுதிக்கோ, பல துறைகளில் உதவும் ஒரு பல துறைக்கூட்டுறவுச் சங்கம் நிறுவச் சென்னை அரசாங்கம் கருதி வருகிறது. இந்தச் சங்கம் உற்பத்தியாளருக்கு வேண்டும் பொருள்களை வாங்கிக் கொடுக்கும்; கடன் வசதியளிக்கும்; உற்பத்தியான பொருள்களை விற்பனை செய்து வரும்; மலிவான விலையில் தேவையான பண்டங்களை வாங்கியுதவும்; மக்கள் நலனைப் பேணும் சங்கமாகவும் விளங்கும். கடலை உடைத்தல், நெல் அரைத்தல், கரும்பாட்டுதல், பனைவெல்லம் செய்தல் போன்ற விவசாயப் பொருள்களைப் பக்குவப்படுத்தும் வேலையில் இச்சங்கங்கள் ஈடுபடும். உழவுத் தொழில், கால்நடை வளர்த்தலிலிருந்து விவசாயக் கச்சாப் பொருள்களைப் பக்கு-வப்படுத்தும் துணைத் தொழில்களை அமைத்தல், வேலையில்-லாக் காலத்தில் வேலை கொடுக்கக்கூடிய குடிசைத் தொழில்-களை நிறுவுதல் வரை எல்லாவிதமான தொழில்களிலும் உதவி புரியும். இந்தச் சங்கம் கிராமப் பொருளாதார அமைப்பின் அச்சாணி போல அமையும்.

இவ்வாறு கிராமத்தின் நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் ஈடுபட்டு உதவும் ஒரு மத்திய பல துறைக் கூட்டுறவுச் சங்கம் அமைப்பது, மக்களிடையே கூட்டுறவு உணர்ச்சி

பெருக ஏதுவாக இருக்கும். காலப் போக்கில் ஏற்படும் மாறுதல்களுக்கிணங்க, ரெய்பீஸன் சங்கங்கள் மாறி இக்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பல துறைக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல் அவசியம் ஆகிறது. பங்குப் பணத்தைச் செலுத்துவதற்கான சட்ட திட்டங்களில் காலத்திற்கேற்பச் சில மாறுதல்கள் செய்தால், சமுதாயக் கூட்டுறவு உணர்ச்சி விரைவில் வளர்ச்சியடைந்து வலுப்பெறும்.

**அடிப்படையை விரிவாக்க வேண்டும்:** சிறிய பங்குத் தொகையைக்கூட ஒரே தவணையில் செலுத்த அளித்த வசதியானது, இது வரையிலும் போதுமானதாயிருந்தது. இச்சமயமோ, கூட்டுறவு நிலையங்களில் தொழிலாளர்களுக்கும் தகுதியான மதிப்பு அளிக்கவேண்டுவது அவசியமாகிறது. தொழிலாளர்கள் தங்கள் பங்குத் தொகைக்குப் பதில் உழைப்பினால் ஈடு செய்ய வசதியளிக்க வேண்டுமென்பது எனது கருத்து. இதைச் செய்வதனால், கூட்டுறவு இயக்கம் வலுப்பெற்று வளர்ச்சியுறும்; வளர்ந்தால் அது உண்மையில் கூட்டுறவுப் பொதுச் சமுதாயத்தை நிலைபெறச் செய்வதற்குச் சிறந்ததோர் அடிப்படையாக அமையும்.

# 4. தமிழிலக்கியச் செல்வம்

[யோகி, ஸ்ரீ. சுத்தானந்த பாரதியார்]

இன்று தலை நிமிர்ந்து ஒய்யாரமாக நடக்கும் ஆங்கிலவரசி பிறக்கும் முன்னேயே, அவள் போன்ற பல அரசிகளுக்கு அரசியாய் விளங்கியவள் நம் தமிழ்த்தாய்! ஆயிரம் பங்கு திறமை வாய்ந்த செகசிற்பியார்களை (Shakespears) நம் தமிழ் அன்னை ஈன்றனள். சரித்திரவாராய்ச்சிக்கு முன்னரே தமிழாராய்ச்சி தழைத்தோங்கியது. தமிழ் இலக்கியங்கள் பல பிறந்த பிறகே, பல நூற்றாண்டுகட்குப் பின்னர், **அகத்தியர்** இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பினர். தமிழ், கடவுளைப்போல, ஒருவரால் பெறப்பட்டதன்று; அது முதல் இறுதியற்றது. பரம்பொருளிடமிருந்து வந்து, பரம்பொருளை விளக்கி, நம்மைப் பரம்பொருளிடமே சேர்க்கும் அருள் வலியுடையது; இறைவன் போன்றே எல்லை அற்றது; கடலால் விழுங்கப்பட்டும், நெருப்பால் எரிக்கப்பட்டும், ஆற்றில் ஆழ்த்தப்பட்டும் அழியாது, என்றும் இளமையுடன் விளங்குவது; தமிழ் எல்லாம் வல்லது; தன்னை அண்டிய அன்பருக்குப் பயிலப் பயில அமுதினும் இனியது!

இவ்வருமைத் தமிழ் முற்காலத்தில்—முதற்சங்க காலத்தில்—அரனும், அகத்தியரும், முருகவேளும், முடிநாகராயரும், நிதியின் கிழவனுமாகிய 549 பேர்களால் 4440 ஆண்டுகள் அருமையாக வளர்க்கப்பெற்று, **காய்சின வழுதி** முதல் **கடுங்கோன்** ஈருக எண்பத்தொன்பது மன்னர்களால் ஆதரிக்கப்பெற்று, **பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை** முதலிய அருமையான பாடல்களையீன்று பொலியும் போது அந்தோ! கடலால் விழுங்கப்பட்டது! பின்பு **இடைச் சங்கம்** எழுந்தது. அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர்க்கருங்கோழி மோசி, வெள்ளூர்க்காப்பியன், சிறு பாண்டரங்கன், திரையன் மாறன், துவரைக் கோமான், கீரந்தையார் முதலிய 59 அறிஞர் போற்ற, 3700 பாவலர் பாட, வெண்தேர்ச்செழியன் முதல் முடத்திருமாறன் ஈருக 59 மன்னரால் மதிப்புடன் வணங்கப்பெற்றது; 3700 ஆண்டுகள் பொலிந்து

அகத்தியமும் தொல்காப்பியமும் ஓதி, கலி, குருகு, வெண்டாளி, வியாழ மாலையகவல், மாபுராணம், பூதபுராணம், இசை நுணுக்கம் முதலிய பல நூல்களையீன்று, கபாடபுரத்திற் பொலிந்து, மீண்டும் கடலுள்ளே மறைந்தது. எல்லாத் துறைகளிலும் விளங்கிய எண்ணிறந்த நூல்களுடன், எண்ணிறந்த புலவருடன் பரந்து விரிந்து கலைக்கடலென்ன உலகம் புகழ்ந்த தமிழைத் திரைக்கடல் விழுங்கியது. கடைச் சங்கத்தில் சேர்ந்த பூதனுர், இளந்திருமாறன், சிறு மேதாவியார், அறிவுடையரனுர், பெருங்குன்றூர் கிழார், மதுரையாசிரியர் நல்லந்துவனுர், மருதனிள நாகனுர், கணக்காயர் மகனுர் நக்கீரனுர், பரணர் முதலிய 49 புலவர் சிறந்து விளங்கினர் ; 449 பேர் பாடினர். நெடுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை 150, பரிபாடல் 70, கூத்து, வரி, பேரிசை, சிற்றிசை முதலிய பன்னூற்களைக் குவித்து, வடமதுரையிலே கடைச்சங்கம் பொலிந்தது !

நம் தமிழ் சுமார் 10090 ஆண்டுகளுக்கு முன்னதாகவே[1] எண் எழுத்துக்களுடன் பொலிந்தது. ஆ! எத்தனை நூல்கள் தமிழணங்கை அணியுறுத்திக் காலத்தால் விழுங்கப்பட்டன ! எத்தனை மன்னர் கவியரங்கேறினர் ! நாடகத் தமிழ்தான் எத்தனை நூல்களாய்ப் பாடப்பெற்றது! குணநூல், கூத்து நூல், சயந்தம், பரதம், முறுவல் முதலிய நாடக நூல்கள் எங்கே ? ஓவிய நூல், தருக்கக் கோவை, தாள நூல், கணுநூல், பஞ்ச பாரதீயம் என்னும் இசைநூல் முதலியவை எங்கே ? எல்லாவற்றையும் தமிழ்ச்சோலையினின்று காலச் சூறுவளி அடித்துச் சென்றது ! அவை நின்றதற்கு அடையாளமாக உரையாசிரியரின் சிற்சில மேற்கோள்களே இப்போது உள்ளன. அகத்தியத்தின் சிற்சில பங்குகளே எஞ்சியுள்ளன. தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, ஔவை அருந்தமிழ் முதலியவையே இப்போது தமிழருக்கு நிழலளிக்கும் பழஞ்சோலை மரங்கள். கடைச்சங்கத்தின் இறுதியில், கி. பி. 100 முதல்

1. முதற்சங்கம் 4440, இடைச்சங்கம் 3700, கடைச்சங்கம் 1950 ; ஆக 10,090 ஆண்டுகள்.

300 க்குள்ளேதான் ஐம்பெருங்காப்பியங்களும் பாடப்பெற்றன. சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இம்மூன்றும் பைந்தமிழ்ச் சோலையின் பழமரங்களாய் விளங்குகின்றன. வளையாபதி, குண்டலகேசி என்னுமிரண்டும் மறைந்து, உரையாசிரியரின் சில மேற்கோள்களிலேதான் உயிர் கொண்டுள்ளன.[1] நீலகேசி, சூளாமணி, உதயணன் காதை, நாககுமாரகாவியம், யசோதர காவியம் முதலியவையும் பாடப்பெற்றமை இக்காலமே.

வாதவூரடிகளின் மனமலரில் திருவாசகம் என்னும் தேன் ஊறியதும் இக்காலத்திலேதான். இக்காலத்தில் சமணரும், புத்தரும் தமிழை அன்பூட்டி வளர்த்தனர். பிங்கலம், திவாகரம் என்னும் நிகண்டுகளும், அணியியல் என்ற அணி நூலும், முத்தொள்ளாயிரமும், சில ஆழ்வார்களின் பாசுரங்களும் இக்காலத்திலேயே பாடப்பெற்றன. இதன் பிறகு, சைவ வைணவப் பாவலர் தமிழணங்கிற்கு ஆயிரக்கணக்கான பாமாலைகள் சூட்டினர். தேவாரத் திருமுறைகளும், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும் தமிழ் யாழில் அருளமுது பிழிந்தன. கற்றோர்க்கினிய **கல்லாடம்**, பிறகு பாடப்பெற்றது. நன்னூல், நேமி நாதம், அகப்பொருள் விளக்கம், புறப்பொருள் வெண்பா மாலை, யாப்பருங்கலக்காரிகை முதலிய நூல்கள் இப்போது பாடப்பெற்றன. 11-ஆம் நூற்றாண்டில் குலோத்துங்க சோழனது அரண்மனையை அலங்கரித்த கம்பர், புகழேந்தி, ஔவை முதலிய புலவர் என்றும் இளமையுடன் இருக்கின்றனர். 10,000 கற்பக மலர்கள் பொழியும் கம்பராமாயணம், ஔவையின் நீதி நூல்கள், கலிங்கத்துப்பரணி, கந்தபுராணம், பெரிய புராணம், பட்டினத்துப்பிள்ளையார் பாடல்கள், தண்டியலங்காரம், புகழேந்தியின் நளவெண்பா முதலியவை ஒப்பற்ற தமிழணிகள். கலி 4502 க்குப் பின்னே தமிழ்ச் சோலையை வளர்த்தவர், அதிவீரராம பாண்டியன், வரதுங்க ராமபாண்டியன், வில்லிபுத்தூரார், அருணகிரிநாதர், பரஞ்சோதி

1. வளையாபதி, குண்டலகேசி என்னும் இரண்டையும் ஆராய்ந்து பாடியுள்ளேன்; அவை அன்பு நிலையத்தாரால் வெளியிடப்பெற்றுள்ளன.

முனிவர், நல்லாப்பிள்ளை, கச்சியப்ப முனிவர், சிவஞான முனிவர் முதலியோர் ஆவர்.

இப்போது சென்றதுபோக எஞ்சி இலகும் தமிழ்ச்சோலையுட்சென்று ஒவ்வொரு மரத்தின் கனியையும் சிறிது சுவைப்போம் :

## சோலை எழில்

நான் கண்ட பைந்தமிழ்ச் சோலை எல்லையற்றது. அது வேலியற்ற விரிபொழில். அதில் எல்லாச் சமயத்தாரும் உல்லாசமாய் உலவுகின்றனர். தனியகந்தையின்றி அதன் தாய்க்கரங்கள் எல்லாருக்கும் கனியளிக்கின்றன. வகுப்புணர்வின்றி, அவரவர் பசிக்கும் சுவைக்கும் ஏற்றபடி, தடையில்லாமல் இங்குத் தமிழ்க் கனி உண்ணலாம். இங்குச் சைவப்பெரியார் தமிழுக்குரிய பண்ணில் தேவார திருவாசகங்களை முழக்குகின்றனர்; பெரிய புராணத்தை அருமையாய்ப் படிக்கின்றனர். வைணவர், ஆழ்வார் திருவாய்மொழியை ஆர்க்கின்றனர். கிறிஸ்தவர், வீரமாமுனிவரின் தேம்பாவணியை வேட்கையுடன் கற்கின்றனர். இஸ்லாமிய சகோதரர் உமறுப்புலவர் எழுதிய சீறுப் புராணத்தை ஆராய்கின்றனர். வள்ளுவரின் தெய்வ காவியத்தை வழிபடாதவரில்லை. கம்பர் கவிதையில் இன்புறுதவரில்லை. தாம் இன்புற்றதைப் பிறரும் இன்புறச் செய்வது தமிழரியல்பு. தருகை நீண்டு அமிழ்தளிக்கும் தாயன்புடைய தனி மொழியே தமிழ்! இனிமையே தமிழ்![1] என் எண்ணங்களை இப்படியே விரித்துக் கொண்டே போனால், வானையே காகிதமாகவும் காலத்தையே எழுதுகோலாகவுங் கொண்டு எழுதினாற்கூடத் தமிழின் பெருமை இன்னும் விரியும். ஆதலின், பைந்தமிழ்ச் சோலைக்குள் நுழைந்து, பட்டது போக எஞ்சி நிற்கும் மரங்களின் தண்ணிழலில் உலவிக் களிப்புறுவோம்.

---

1. திராவிடம், த்ரமிடம், த்ரமிளம், தமிளம், தமிழ் என்று வந்ததெனச் சிலர் முணுமுணுப்பர்; அற்றன்று. தமிழ் தனிச்சொல்; தனி மொழி; அதற்கு 'இனிமை' என்பது பொருள்.

# 5. சிமிட்டி

[திரு. எ. இராமகோபாலர்]

நாம் இப்பொழுது காடுகளில் மிருகங்கள் வசிப்பதைப் பார்க்கிறோம். ஆதியில் மனிதனும் காடுகளில் இவ்விதமே வசித்து வந்ததாகத் தெரிகிறது. அக்காலத்தில் வீடு என்பதே என்ன என்பது அவனுக்குத் தெரியாது. மழை, வெயில், காற்று, குளிர், பனி போன்ற இயற்கையின் தாக்குதல்களிலிருந்து தப்ப, மலைக்குகைகளும் மரப்பொந்துகளுமே அவனுக்கு அபயமளித்தன. காலப்போக்கில் மற்ற உயிரினங்களைப்போலவே மனிதரின் கூட்டமும் பெருக ஆரம்பித்தது. ஆனால், அதற்குத் தகுந்தபடி அதிகமான மலைக் குகைகளோ, மரப்பொந்துகளோ புதியனவாகத் தோன்றவில்லை. ஏற்கெனவே இருந்தவைகளேதான் இருந்தன. ஆகையால், அவைகள் அவர்களுக்கு இப்பொழுது போதுமானவைகளாய் இல்லை. புதியனவாகவும் அவைகளை அவர்கள் அமைப்பதென்பது முடியாது. ஆகையால், அவர்கள் வேறு வழியை நாட வேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும், இருளடைந்த குகைகளுக்காகக் கொடிய விலங்குகளோடு போட்டியிட்டுப் போர் செய்யவும் வேண்டியிருந்தது. காடுகளில் எளிதிற்கிடைக்கும் மரம், செடி, கொடி, இலைகளின் உதவியால் சிறு குடிசைகளை அமைக்க அப்பொழுது அவர்கள் கற்றுக்கொண்டார்கள். அக்குடிசைகளால் பெருமழை காற்று முதலியவைகளையும் கறையானையும் எதிர்த்து நிற்க முடியவில்லை. அவை அடிக்கடி பழுது பட்டுப்போயின. ஆகையால், காலப்போக்கில் இவ்விதக் குடிசைகள் மனிதனுக்குத் திருத்தி அளிக்கவில்லை. 'இவ்விதக் குறைகள் இல்லாத வீட்டை எப்படிக் கட்டலாம்?' என்பதில் அவன் நாட்டம் சென்றது. எந்த எந்தத் துறைகளில் மனிதனுடைய சிந்தனைகள் செல்கின்றனவோ, அந்த அந்தத் துறைகளில் ஆதிகாலந்தொட்டு அவன் வெற்றியே காண்கிறான். அதற்கொப்ப, வீடு கட்டும் கலையிலும் காலப்போக்கில் பல புதுமையான மாறுதல்கள் ஏற்பட்டன. குடிசை வீடு மண் சுவர் வீடாய் மாறியது. பிறகு செங்கல்

வீடு தோன்றியது. செங்கல்லுக்குச் சாந்து பூச வேண்டும். சாந்து பூசாத செங்கல் வீடு விரைவில் பழுதுபட்டுவிடும். முதலில் செங்கல்லுக்கு மண்ணையே சாந்தாகப் பூசிவந்தார்கள். ஆனால், அது அவ்வளவு திருத்திகரமாய் இல்லை. ஆகையால், பிறகு சுண்ணும்புக் காறை பூசும் வழக்கம் தோன்றியது. உலகிலேயே மிகப் புராதனமான இடிந்த கோவில்களில் ஒன்று ஸைப்ரஸ் தீவிலிருந்துகொண்டிருக்கிறது. அக்கோவிலில் சுண்ணும்புச்சாந்துதான் பூசப்பட்டிருக்கிறதாம். நம் நாட்டின் பூர்விகக் கலைச்சின்னங்களான மோகஞ்சதாரோ, ஹரப்பா, நளாந்தா, ஹம்பி என்பவற்றின் சிதைவுகளிலும் இதையே நாம் பார்க்கிறோம். எகிப்தியர்கள் சாதாரணச் சுண்ணும்புக்குப் பதில் '**ஜிப்ஸம்**' என்னும் ஒரு வகையான சுண்ணும்பை உபயோகித்திருக்கிறார்கள். நாலாயிரம் ஆண்டுகட்கு முன்பு கட்டப்பட்ட உலகப் புகழ் பெற்ற **பிரமிடுகளில்** ஜிப்ஸத்தையே அவர்கள் சாந்தாக உபயோகித்திருக்கிறார்கள். உரோமாபுரி மக்கள் எரிமலைச் சாம்பலையும் சுண்ணும்பையும் ஒன்றாகக் கலந்து, சாந்தாகப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். எரிமலைச் சாம்பலும் சுண்ணும்பும் கலந்த சாந்து, தண்ணீருக்குள் மிகவும் கெட்டிப்படக்கூடியதாகையால், நீர் நிலைகளிலும் அதன் ஓரங்களிலும் கட்டவேண்டியிருந்த கட்டடங்களுக்கு இதை முக்கியமாக உபயோகித்திருக்கிறார்கள். உரோமாபுரியில் சிறப்பும் தொன்மையும் உடைய கட்டடங்களான **பாந்தியன், கேரகோலா குளிப்பு அறை** முதலியவைகள் எரிமலைச் சாம்பலும் சுண்ணும்பும் கலந்த சாந்தால் கட்டப்பட்டவைகளே. 18-ஆம் நூற்றாண்டின் இறுதி வரை கட்டடங்களுக்குச் சாந்திடும் முறைகள் இவ்விதமே எல்லா நாடுகளிலும் இருந்து வந்தன. புதிய மாறுதல் ஏதும் ஏற்படவில்லை. கி. பி. 1756 ல் **ஸ்மேடன்** என்னும் பிரிட்டிஷ் இஞ்சினியர் ஒருவர், 'சிறந்த புதிய சாந்தொன்று கண்டுபிடிக்க வேண்டும்,' என்னும் முயற்சியில் முதன்முதலாக ஈடுபட்டார். அவரிடம் **எடிஸ்டோன்** என்ற இடத்தில் கலங்கரை விளக்கம் கட்டும் வேலை ஒப்படைக்கப்பட்டிருந்தது. தண்ணீர் பட்ட உடனேயே கெட்டிப்படும்

சாந்து ஒன்றை அதற்காக அவர் கண்டுபிடிக்க வேண்டி-யிருந்தது. அவர் இதற்காகப் பல ஆண்டுகள் விடாமுயற்சி-யுடன் ஆராய்ந்தார் ; கடைசியில் பதினெட்டாம் நூற்றாண்-டின் இறுதியில் ஒரு புதிய முறையைக் கண்டுபிடித்தார். சுண்ணும்போடு களிமண்ணை எவ்வளவுக்கெவ்வளவு அதிக-மாகச் சேர்த்து வெப்பம் ஊட்டுகிறோமோ, அவ்வளவுக்-கவ்வளவு தண்ணீரில் மிகுதியாகவும் விரைவாகவும் கெட்டிப்-படும் சாந்து கிடைக்கும் என்பதே அது. அதைப் பின்-பற்றிக் கி. பி. 1824 ல் **ஆஸ்படின்** என்ற ஆங்கிலேயர் சுண்ணும்பையும் களிமண்ணையும் கலந்து வெப்பமூட்டி ஒரு புசிய சாந்தை—அதாவது சிமிட்டியைத் (Cement) தயார் செய்தார். இங்கிலாந்தில் **போர்ட்டுலண்டு** என்ற இடத்தில் கிடைக்கும் கல் மிகவும் கெட்டியும் உறுதியுமானது. ஆகை-யால், அக்கல்லைப்போல இச்சிமிட்டி கெட்டியும் உறுதியு-மானது என அர்த்தப்படும்படி, தாம் புதிதாகக் கண்டுபிடித்த சிமிட்டிக்குப் போர்ட்லண்டு சிமிட்டி (Portland Cement) என அவர் பெயரிட்டார். இதன் பிறகு படிப்படியாகச் சிமிட்டி தயாரிக்கும் முறை வளர்ச்சியடைந்ததோடு, உலகின் பல்வேறு நாடுகளிலும் புகத் தொடங்கியது. நம் நாட்டுக்கு நெடுங்காலமாக வெளி நாடுகளிலிருந்தே சிமிட்டி வந்து-கொண்டிருந்தது. ஆனல், இப்பொழுது நம் நாட்டிலேயே பல சிமிட்டித் தொழிற்சாலைகள் தோன்றியும், தோன்றிக்-கொண்டும், தோன்றவுமிருக்கின்றன. கூடிய விரைவில் நமக்கு வேண்டிய சிமிட்டி எல்லாம் நம் நாட்டிலேயே உற்-பத்தியாகிவிடும்.

சிமிட்டியை இரண்டு முறைகளால் தயாரிக்கலாம். ஒன்று, ஈரமுறை; மற்றொன்று, காய்ந்த முறை. முதலில் ஈரமுறை யாது என்பதைக் கவனிப்போம்: சிமிட்டி தயா-ரிக்கத் தேவையான இரண்டு முக்கியப் பொருள்களுள் ஒன்று, சுண்ணும்புக்கல். பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட சுண்ணும்புக்கல் பெரிது பெரிதாய் இருக்கும். அதை அப்-படியே தூள் செய்வது சிரமம். ஆகையால், முதலில் அதை உடைக்கும் இயந்திரத்தில் கொட்டிச் சுமார் ஒரு கன அங்குல அளவுள்ளவைகளாக உடைப்பார்கள். இவ்விதம் உடைக்கும்

இயந்திரத்தில் பல வகை உண்டு. அவற்றில் விசேஷமானது வில்லமைப்போடு கூடிய சம்மட்டி இயந்திரம் (Spring Hammer Crusher) என்பது. இதில் பல இரும்புத் தடிகளிருக்கும். ஒவ்வொரு தடியின் நுனியிலும் சுழலும் சுத்தியல் ஒன்று பொருத்தப்பட்டிருக்கும். ஒவ்வொரு சுத்தியலுக்கும் அடியில் ஓர் இரும்புத் தகடு இணைக்கப்பட்டிருக்கும். உருண்டை வடிவமான ஒரு சங்கிலியின் உதவியால் சுண்ணும்புக் கல் இத்தகடுகளை அடையும். இத்தகடுகளுக்கு இடையில் ஒரு சதுர அங்குல இடை வெளிதான் இருக்கும். ஆகையால், அங்கே வந்து சேரும் சுண்ணும்புக் கல், அத்துவாரத்தில் புகும் அளவு சிறிதாக உடைபட்டால்தான் கீழே போக முடியும். உடைக்கும் இயந்திரத்தில் உள்ள இரும்புத் தடிகளையும் சுழலும் சுத்தியல்களையும் ஒரு மின்சார மோட்டாரின் உதவியால் இயக்குவார்கள். இதனுல், அங்கே வந்து சேரும் கற்கள் அடிபட்டு, சிறு துண்டுகளாக உடைந்து, ஒரு கன அங்குல அளவுக்குச் சிறிதாக உடைபட்டதும் தகடுகளுக்கு இடையே உள்ள துவாரங்களின் வழியாகக் கீழே வரும். இப்படிக் கீழே வரும் தூள்கள் வட்டவடிவமான ரப்பர்ப் பெட்டி ஒன்றில் விழும். அப்பெட்டி நீண்ட வடிவமானது. அது எப்போதும் சுழன்றுகொண்டே இருக்கும். அரைக்கும் ஆலைக்குமேல் சம கோண வடிவில் கட்டப்பட்டிருக்கும் தொட்டி ஒன்றில், ரப்பர்ப் பெட்டியிலிருந்து சுண்ணும்புக் கல் தூள்கள் பிறகு போய்ச்சேரும். இத்தொட்டியை ஆங்கிலத்தில் ‘ஹாப்பர்’ எனக் கூறுவார்கள். இத்தொட்டியின் அடிப்பகுதி குவிந்திருக்கும். அங்கே உள்ள ஒரு துவாரத்தின் வழியாகத் தொட்டியிலிருந்து கற்கள் மில்லுக்கு வந்து சேரும். மில்லில் அக்கற்களோடு களிமண் நீர் சேர்த்து நன்ருக அரைக்கப்படும். அங்கே எவ்விதம் அது அரைக்கப்படுகிறது எனத் தெரிந்துகொள்வதற்கு முன், களிமண் நீர் எப்படித் தயாரிக்கப்படுகிறது என அறிந்துகொள்ள வேண்டுவது அவசியம்.

சிமிட்டி தயாரிக்கச் சுண்ணும்புக்கு அடுத்தபடியாக முக்கியமாகத் தேவைப்படுவது களிமண். இது ஒட்டிக்கொள்ளும் பிசுபிசுப்புத் தன்மையுடையது. ஆகையால்,

இதைச் சுண்ணும்புக் கல்லோடோ, அல்லது தனித்தோ, இயந்திரங்களிலிட்டு அரைத்தால் முக்கியமான துவாரங்களை மூடி அவைகள் இயங்குவதையே நிறுத்திவிடும். ஆகையால், இதைத் தண்ணீர் விட்டுக் கலக்கி ஒரு வகை விசேஷ இயந்திரத்தில் (Wash mill) இட்டு அரைப்பார்கள். இவ்வியந்திரம் வட்ட வடிவமாகச் சுமார் 13 அடிக் குறுக்களவும் 10 அடி ஆழமும் உள்ளதாய் இருக்கும். இதன் மத்தியில் ஒரு கம்பமிருக்கும். அதில் ஒரு பெரிய பற்சக்கரம் பொருத்தப்பட்டிருக்கும். அதன் உதவியால் எதிரெதிராகப் பொருத்தப்பட்டிருக்கும் இரண்டு கனத்த இரும்புத் தகடுகள் சுழன்றுகொண்டேயிருக்கும். கரைந்திருக்கும் களிமண்ணில் ஏதாவது பெரிய அணு இருந்தால், அதை நன்ருக அரைப்பதோடு அடியில் மண் தங்காமல் இத்தகடுகள் கலக்கிக்கொண்டே இருக்கும். இப்படி இவ்வியந்திரத்தில் அரைத்துக் கலக்கிய களிமண் நீர் ஒரு குழாய் மூலம் 50 அடி ஆழமும் 10 அடிக் குறுக்களவுமுள்ள ஒரு கிணற்றில் போய்ச் சேரும். அக்கிணற்றின் அடிப்பகுதி குவிந்திருக்கும். அங்கே தனிக் குழாய்கள் மூலம் அமுத்தமூட்டிய காற்றை (Compressed air) இந்நீரில் கலப்பார்கள். இதனுல், தண்ணீரில் கரைந்திருக்கும் களிமண் அடியில் தேங்க முடியாது; கரைந்த நிலையிலேயே இருக்கும். இக்கிணற்றை ஆங்கிலத்தில் 'ஸைலோ' எனக் கூறுவார்கள்.

இப்பொழுது இந்நீரை ஒரு குழாயின் மூலம் சுண்ணும்புக் கல் வந்து சேர்ந்துள்ள அரைக்கும் மில்லுக்குக் கொண்டு சேர்ப்பார்கள். இந்த ஆலை பார்ப்பதற்கு நீண்ட ஓர் இரும்புக் குழாயைப் போலிருக்கும். இது 45 அடி நீளமும் 8 அடிக் குறுக்களவும் உள்ளதாய் இருக்கும். பல வித அளவுள்ள இரும்புச் சல்லடைகளை வைத்து இதனுட்பக்கத்தைப் பல அறைகளாகத் தடுத்திருப்பர். ஓர் அறையிலிருந்து அடுத்த அறைக்கு அரைக்கப்பட்ட சுண்ணும்புக் களிமண்ணும் இச்சல்லடைகள் வழியாகவே போக வேண்டும். முதல் அறையைவிட இரண்டாவதறையின் சல்லடைக் கண்கள் சிறியனவாய் இருக்கும். இவ்விதமே முந்திய அறையை விட அடுத்த அறையின் கண்களைச் சிறியனவாக்கிக்-

கொண்டே போய், கடைசி அறையின் கண்கள் சாதாரண-மான நம் கண்களுக்குக் கூடத் தெரியாத அளவு சிறிதாகச் செய்து வைத்திருப்பார்கள். கடைசி அறையில் ஒரு சதுர அங்குலத்தில் 29584 துவாரங்கள் இருக்குமென்றால், அவை எவ்வளவு நுண்ணியவாய் இருக்குமென்பதை நீங்களே யூகித்துக்கொள்ளலாம். ஒவ்வோர் அறையிலும் பல பல நீளத்திலும் அளவிலும் நூற்றுக்கணக்கான இரும்புக் குண்டுகள் தொங்கிக்கொண்டிருக்கும். நிமிஷத்திற்கு 19 முறை குழாய் வடிவிலுள்ள இந்த ஆலை சுழலும். அப்-பொழுது இதில் உள்ள சுண்ணும்புக் கற்களை இரும்புக்-குண்டுகள் தாக்கித் தாக்கிச் சிறு பொடிகளாக்கிப் படிப்படி-யாகக் கடைசி அறைக்குக் கொண்டு சேர்த்துப் பிறகு அங்கேயிருந்து வெளியே தள்ளிவிடும். கடைசி அறையை விட்டு வெளியேறும்போது சுண்ணும்புக்கல் மிக மிக நுண்-ணிய பொடியாய் இருக்கும். களிமண் நீரோடு சேர்ந்து அது கடைசி அறையை விட்டு வெளியேறும்போது களிமண் சேற்றைப் போலக் காட்சியளிக்கும். இச்சேறு 100 அடிக் குறுக்களவும் 10 அல்லது 12 அடி ஆழமும் உள்ள ஒரு தொட்டியில் வந்து சேரும். அப்பொழுது இச்சேற்றில் 35% முதல் 40% வரை தண்ணீர் அடங்கியிருக்கும். களிமண் நீர் தேங்கிய தொட்டியில் செய்ததைப் போலவே இத்தொட்டி-யிலும் அழுத்தம் ஊட்டிய காற்றைச் செலுத்திக் கலக்கிக்-கொண்டே இருப்பார்கள். நல்ல சிமிட்டி தயாரிக்கப் போது-மான அளவு சுண்ணும்புக் களிமண்ணும் இச்சேற்றில் அடங்கியிருக்கின்றனவா எனவும் சோதித்துப் பார்ப்பார்கள். ஒரு பங்கு களிமண்ணுக்கு 3·4 பங்கு சுண்ணும்பு வீதமிருந்-தால், அச்சேற்றிலிருந்து நல்ல சிமிட்டி தயாரிக்கலாம். இதற்குக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ ஏதாவ-தொன்றிருந்தால், வேண்டிய அளவு அதைச் சேற்றோடு சேர்த்துக் கலக்கிச் சரி செய்வார்கள்.

இப்படிச் சரி செய்த சேற்றைப் பிறகு சுழலும் அடுப்பில் (Rotary Kiln) இட்டுக் காய்ச்சுவார்கள். இவ்வடுப்புச் சுமார் 100 அடி நீளமும் 12 அடிக் குறுக்களவும் உள்ள ஒரு நீண்ட குழாயைப்போன்றிருக்கும். ஒரு பக்கம் சற்றுத்

தாழ்வாகவும் மறு பக்கம் சற்று உயரமாகவும் சாய்வான நிலையில் இது பொருத்தப்பட்டிருக்கும். உயர்வான பகுதியின் கோடியில் சேறு உள்ளே வருவதற்கு ஒரு பாதையும், அடுப்பிலிருந்து புகையும் ஆவியும் மேலே போவதற்கு ஒரு பாதையும் அமைக்கப்பட்டிருக்கும். தாழ்வான பகுதியின் கோடியில் சுமார் ஓரடிக் குறுக்களவுள்ள குழாய் ஒன்று பொருத்தப்பட்டிருக்கும். இதன் வழியாக அடுப்புக்கு வேண்டிய நிலக்கரித் தூள் உள்ளே வரும். நிலக்கரியை ஓர் இயந்திரத்தின் உதவியால் நன்றாக அரைத்துத் தூளாக்கி ஒரு மின்சார விசிறியின் உதவியால் மேலே சொன்ன குழாயின் வழியாக அடுப்புக்குள் செலுத்துவார்கள். அடுப்புச் சாய்வாக அமைக்கப்பட்டிருப்பதால், உயர்வான பகுதியின் கோடியில் உள்ள சேறு சறுக்கிக்கொண்டு தாழ்வான பகுதியை அடையும். இங்கே குழாயின் மூலம் உள்ளே பிரவேசிக்கும் நிலக்கரித்தூள் அதோடு கலந்து எரிய ஆரம்பிக்கும். இதனால், சேற்றிலடங்கியிருக்கும் தண்ணீரெல்லாம் ஆவியாக மாறி, உயர்வான பகுதியின் கோடியிலுள்ள பாதையின் வழியாக வெளியேறிவிடும். குழாய் உருவிலிருக்கும் இவ்வடுப்பு நிமிஷத்துக்கொரு முறை சுழன்றுகொண்டேயிருப்பதால், சேறு புரண்டு கொடுப்பதோடு, அதன் எல்லாப் பகுதியிலும் நிலக்கரித்தூள் கலந்து எரிந்து நீர்ப்பகுதி முழுவதையும் விரைவாகப் போக்க வசதியாய் இருக்கிறது. நீர் முழுதும் நீங்கியதும் அடுப்பில் எஞ்சியிருக்கும் சிமிட்டி ஜவ்வரிசி அல்லது பட்டாணி அளவு குறுநொய்களாய் இருக்கும். அடுப்பிலிருந்து இதை வெளியே எடுத்துச் சிறிது நீர் தெளித்துப் பெரிய பெரிய களஞ்சியங்களில் பத்திரப்படுத்துவார்கள். பிறகு வேண்டும் போது தூக்கும் இயந்திரங்களின் உதவியால் வேண்டும் அளவு வெளியே எடுத்து, உடைக்கும் இயந்திரத்தில் கொடுத்துச் சிறு தூளாக நொறுக்குவார்கள். பிறகு இதோடு 4% ஜிப்ஸம் கலந்து, அரைக்கும் ஆலையில் இட்டு, மிக நன்றாகவும் நேர்த்தியாகவும் அரைப்பார்கள். இப்படி அரைக்கப்பட்ட சிமிட்டி கடைசியில் ஸைலோவைப் போன்ற பெரிய தொட்டிகளில் வந்து சேரும். தொட்டியிலிருந்து கோணிப்பைகளில்

நிரப்பிப் பிறகு வெளியூர்களுக்கு அனுப்புவார்கள். இது-தான் ஈரமுறையில் சிமிட்டி தயாரிக்கும் விதம்.

காய்ந்த முறையில் சிமிட்டி தயாரிப்பது பெரும்பாலும் ஈரமுறையை ஒத்ததே. ஆனால், ஒரே ஒரு முக்கிய வித்தி-யாசம் உண்டு. களிமண்ணோடு தண்ணீர் சேர்க்காமல் அரைப்பதே அது. களிமண்ணை நன்றாக ஈரப்பசை சிறிதும் இல்லாமல் உலர்த்திச் சுண்ணும்புக் கல்லோடு கலந்து, முத-லில் உடைக்கும் இயந்திரத்தில் இட்டு, உடைப்பார்கள். பிறகு மில்லில் இட்டு நன்றாக அரைப்பார்கள். இப்படி அரைத்ததைச் சுழலும் அடுப்புக்கு அனுப்பி நிலக்கரித் தூளோடு கலந்து எரித்துப் பிறகு உடைக்கும் இயந்திரத்தில் நொறுக்கி, அரைக்கும் மில்லில் இட்டு அரைத்துச் சிமிட்டி தயாரிப்பார்கள்.

கட்டடக் கலையில் அனுபவமுள்ளவர்கள் தாங்கள் உப-யோகத்துக்கு வாங்கும் சிமிட்டியைத் தரப்பரீட்சை செய்து பார்த்த பிறகே வாங்குவார்கள். ஏனெனில், சிமிட்டி பல சமயம் ஏதாவது காரணத்தால் கெட்டுப்போவதுண்டு. அப்-படிக் கெட்டுப்போன சிமிட்டி ஒன்றுக்குமே பயன்படாது. குப்பையில் கொட்டவேண்டுவதுதான். ஆகையால், எந்தச் சிமிட்டியையும் அது நல்ல நிலையிலிருக்கிறதா எனச் சோதித்துப் பார்த்த பிறகே வாங்க வேண்டும். 'ஒரு சிமிட்டி நல்லதா, கெட்டதா? எவ்வளவு தூரம் அது பலம் பொருந்தியது?' எனச் சோதித்தறிய அரசாங்கத்திலேயே சில தரப் பரீட்சைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவற்றில் தேர்ச்சி பெறாத சிமிட்டிகள் பயனற்றவை என ஒதுக்கப்-படும். அச்சோதனைகள் பின் வருமாறு :

(1) ஒரு சிமிட்டி எவ்வளவுக்கெவ்வளவு மிருதுவாக அரைக்கப்படுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அதிகமாகப் பலம் பொருந்தியதாய் இருக்கும். ஆகையால், ஒரு சதுர அங்குலத்தில் 18900 துவாரங்கள் உள்ள ஒரு சல்லடையில் 100 தோலாச் சிமிட்டியைப் போட்டு, 15 நிமிஷம் கையால் தேய்ப்பார்கள். பிறகு சல்லடையில் எஞ்சியுள்ள மிருது குறைவான சிமிட்டியை எடை போட்டுப் பார்ப்பார்கள். 10

தோலாவுக்கு அது குறைந்தால், நல்ல சிமிட்டி என்றும், மிகுதியாயிருந்தால், மட்டமென்றும் தீர்மானிப்பார்கள்.

(2) சிமிட்டியோடு 22% தண்ணீர் கலந்து ஓர் அச்சில் நிரப்புவார்கள். பிறகு அதில் அடிக்கடி ஊசியைக் குத்திச் சோதிப்பார்கள். ஊசி இறங்க முடியாதபடி 10 மணி நேரத்-துக்குள் அது கெட்டிப்பட்டுவிட வேண்டும். கெட்டிப்பட இதற்குமேல் நேரமானாலோ, அல்லது அரை மணி நேரத்திற்-குள்ளாகவே கெட்டிப்பட்டுவிட்டாலோ, அச்சிமிட்டி மட்ட-மானது எனக் கொள்ளுவார்கள்.

(3) ஒரு பங்கு சிமிட்டியோடு 3 பங்கு மணல் கலந்து, 8% தண்ணீர் ஊற்றி, நன்ருகப் பிசைந்து, ஓர் அச்சில் நிரப்புவார்கள். இதற்காகப் பயன்படும் மணல் மேலே நாடுகளிலிருந்து பிரத்தியேகமாக வருகிறது. ஒரு நாள் அச்சிலிருந்த பிறகு அச்சிமிட்டிப் பலகையை எடுத்துத் தண்ணீரில் இரண்டு நாட்கள் போட்டு வைப்பார்கள். பிறகு அதை எடுத்து அதற்கென்று பிரத்தியேகமாய் இருக்கும் இயந்திரமொன்றில் இணைத்து, மறுபக்கம் விசையால் இழுப்-பார்கள். அச்சிமிட்டிப் பலகை இரண்டாக அறுந்து போக எவ்வளவு விசை தேவைப்படுகிறதோ, அதுதான் அதன்பலம் எனக் கொள்ளுவார்கள். சதுர அங்குலத்துக்கு 300 ராத்த-லுக்குக் குறைவான பலம் பொருந்தியதாய் இருந்தால், அது மட்டமான சிமிட்டி எனத் தள்ளிவிடுவார்கள். சாதாரண-மாக நம் நாட்டுச் சிமிட்டிகள் சதுர அங்குலத்துக்கு 500 ராத்தல் பலம் பொருந்தியவை. இவ்விதம் ஒவ்வொருவரும் சிமிட்டியைத் தரப்பரீட்சை செய்து பார்த்துப் பிறகு வாங்-குவதென்பது முடியாததாகும். ஆகையால், அரசாங்கமே அடிக்கடி விற்பனைக்கிருக்கும் சிமிட்டிகளைச் சோதித்துத் தரத்தை வரையறை செய்துவிட்டால், மக்கள் இன்னும் நல்ல பயனை அடைவார்கள்.

# 6. புரட்சிக் கவிஞர் இளங்கோ

[திரு. ம. பொ. சிவஞான கிராமணியார்]

சிலப்பதிகார ஆசிரியர் **இளங்கோவடிகள்** ஒரு பெரும்புரட்சிக் கவிஞராவார். அவரது வரலாறும் அவர் இயற்றிய காவியத்தில் வரும் கருத்துக்களும் இதை வலியுறுத்தும்.

தந்தை சேரலாதன், தமையன் செங்குட்டுவன் ஆகியோர்களுடன் அரச சபையிலிருந்த இளங்கோவைப் பார்த்து, 'சேரநாட்டை ஆளப் பிறந்தவன் செங்குட்டுவனல்லன்; இளங்கோதான்,' என்று சோதிடன் சொன்னான். அதைக் கேட்ட இளங்கோ, 'மூத்தவன் இருக்க இளையவன் ஆள்வது முறையன்று; ஆளப்பிறந்தவன் நானல்லன்; என் அண்ணனே. சோதிடன் சொன்ன விதியை என் மதியால் வெல்வேன்!' என்று கூறி அப்போதே துறவியரானார்.

இளங்கோ எவற்றைத் துறந்தார்? அரசர் பதவியையும் அரண்மனை வாழ்வையும். இது எத்தகைய புரட்சிகரமான தியாகம்! இளங்கோ புவியரசைத் துறந்தார்; ஆனால், கவியரசராய் விளங்கினார். செம்மல் செங்குட்டுவனைவிடப் புகழுடையவர் கவிஞர் இளங்கோவே. செங்குட்டுவன் ஆட்சியின் துணை கொண்டு தனது பெயரை நிலை நாட்டினான். ஆனால், இளங்கோவடிகள், அறிவின் திறத்தால் தமது புகழை நிலை நாட்டினார். என்றும் அழியாத கலைச்செல்வத்தைக் கொடுத்து அதற்கு நம் இருதயத்தை இருப்பிடமாக அமைத்துவிட்ட பெருமை இளங்கோவைச்சாரும்.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை எப்படித் தொடங்குகின்றார் பாருங்கள்!

'திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!
கொங்குஅலர் தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
வங்கண் உலகளித்த லான்.

'ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலம்திரித லான்.

'மாமழை போற்றுதும்! மாமழை போற்றுதும்!
நாமநீர் வேலி உலகிற்கு அவன்அளிபோல்,
மேல்நின்று தான்சுரத்த லான்.'

என்று திங்கள், ஞாயிறு, மழை ஆகிய இயற்கைச் சத்திகளைப் போற்றுகிறார். அவற்றிலே இறைவனது அருளைக் காண்கிறார் போலும்! திங்களைச் சோழ மன்னனது வெண்குடைக்கும், ஞாயிற்றினை அவனது ஆஞ்ஞா சக்கரத்திற்கும் உவமை காட்டுவதால் இயற்கை, இறைவன், அரசன் ஆகிய முப்பொருளையும் சேர்த்து வணக்கமும் வாழ்த்தும் கூறுகிறார். இது ஒரு புது முறை.

திங்களின் தண்ணொளியும், ஞாயிற்றின் செஞ்சுடரும் இல்லாவிடில், உயிர்கள் வாழ்வது இயலாது. மழை இல்லாவிடினும் அப்படியே. 'வானம் வறக்குமேல் வானோர்க்கும் சிறப்பொடு பூசனை செல்லாது,' என்பதன்றோ வள்ளுவர் வாக்கு? ஆகவே, மக்கள் வாழவும் மண் தழைக்கவும் காரணமான இயற்கைச் சத்திகளுக்குத் தலை வணங்கி நன்றி செலுத்துவதே தமது தலையாய கடமை என்று இளங்கோ எண்ணுகிறார்.

இனி, நாட்டையும் வணங்குகிறார்:

'பூம்புகார் போற்றுதும்! பூம்புகார் போற்றுதும்!
விங்குநீர் வேலி உலகிற்கு அவன்குலத்தோடு
ஓங்கிப் பரந்துஒழுக லான்.'

'போற்றி போற்றி! பூம்புகார் போற்றி! பொன்னாடு போற்றி!' என்று புகாரைப் போற்றுவதன் மூலம் தமிழ் நாட்டையே போற்றுகிறார். இங்கும் அரச வணக்கம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது. புகார்ப்பதி வாழும் மக்களின் பெருமையைக் கூறுகின்றார்:

## 'பதியெழுவறியாப் பழங்குடி'

இமயமலை பொதியமலை எல்லாம் எப்படி இடம் பெயர்வதில்லையோ, அப்படிப் புகார் நகரத்து மக்களும் அந்நகரத்தை விட்டு நீங்காது நிலைபெற்று வாழ்பவராவார் என்று சோழ நாட்டு மக்களின் பெருமையைக் கூறுகிறார்.

இதை ஒரு தேசியப் பாடலென்றே சொல்லலாம்.

'தேசிய கீதம்' என்பது என்ன? நாட்டின் இயற்கையையும் வளத்தையும் மக்களின் மேன்மையையும் அரசின் பண்பையும் போற்றுவதேயன்றோ? ஆனால், இன்று அடிமை நாட்டில் ஆள்வோரைத் தாக்கிப் பாடுவதுதான் தேசிய கீதமாக எண்ணப்படுகிறது. ஆனால், இளங்கோவடிகள் காலத்தில் தமிழகம் தன்னாட்சி செலுத்தியது. குறை களைந்து முறை செய்து காத்ததால், மன்னனை 'இறை' என வாழ்த்தி வணங்கினர். எனவே, நாட்டுப் பற்றும் அரச பத்தியும் பிரிக்க முடியாதவாறு பிணைந்து இருந்தன. அதனாலேதான் இளங்கோவடிகள் மண்ணைப் போற்றுவதோடு நில்லாமல், மன்னனையும் போற்றுகிறார்.

இதே போன்று மங்கல விழாவிலும், மற்றச் சடங்குகளிலும் நாட்டையும் நாட்டையாளும் மன்னனையும் போற்றும் வழக்கம் மக்களிடையே இருந்து வந்ததற்குச் சிலப்பதிகாரத்தின் வேறு சில இடங்களிலும் சான்று உண்டு.

கண்ணகி கோவலர் திருமணத்திற்குப் பின் அவர்களைப் பள்ளியறைச் சேர்க்கையில் சேர்த்து, இளம்பெண்டிர் அவர்களுக்கு ஆரத்தி எடுத்து வாழ்த்துக் கூறுகின்றனர். அப்போது,

'இப்பால் இமயத்து இறுத்திய வாள்வேங்கை
உப்பாலைப் பொற்கோட்டு உழையாக—எப்பாலும்
செருமிகு சினவேல் செம்பியன்
ஒருதனி ஆழி உருட்டுவோன் எனவே.'

'எங்கள் சோழ மன்னன் இமயத்திற்கு இப்பால் பொறித்த புலிக்கொடியானது, அப்பாலுள்ள பொன்மலையாகிய மேரு மலையிலும் விளங்குவதாக! எல்லாத் திசைகளிலும் போரில் வெற்றி பெற்ற எங்கள் செம்பியன் தனது ஆணையை ஒழுங்காகச் செலுத்துவோனாக!' என்று தங்கள் மன்னன் இமயத்தில் புலிக்கொடி நட்ட பெருமையைக் கூறி, அக்கொடி மேருமலையையும் எட்டிப் பிடிக்க வேண்டுமென்ற தங்கள் எண்ணத்தையும் வெளிப்படுத்தி, 'திக்கெட்டும் வெற்றி பெற்ற சோழ மன்னன் தீதின்றி நெடுங்காலம் வாழ்வானாக!' என்று வாழ்த்துக் கூறுகிறார்.

**கானல் வரி**யிலும் இதே காட்சியைக் காண்கிறோம்!

கோவலனும் மாதவியும் மாறிமாறிப் பாடுங்கால், சோழ மன்னன் பெருமையையும் காவிரியாற்றின் வளத்தையும் வாழ்த்திய பின்னரே வரிப்பாடல்கள் பாடுகின்றனர்.

இளங்கோவடிகள் தமது காவியம் முழுவதிலும் பெண்ணின் பெருமையையே பேசுகின்றார். காவியத்தின் பெயராகிய '**சிலப்பதிகாரம்**' என்ற சொல், பெண்ணின் காலணியாகிய சிலம்பையே குறிக்கின்றது. சிலப்பதிகாரக் கதையில் கண்ணகியே முக்கிய பாத்திரமாய் இருக்கின்றாள். கண்ணகி மூலம் பெண்ணினத்தின் வரலாற்றிலேயே ஒரு புரட்சியைச் செய்கிறார் இளங்கோவடிகள். புரட்சிக்கு ஆடவர்களே தகுதியுடையவர்கள் என்று எல்லாரும் எழுதுவர். ஆனால், இளங்கோவடிகள், 'தாங்க முடியாத கொடுங்கோன்மை தாண்டவமாடினால், ஆக்கும் செயல் படைத்த பெண்களும் பழி வாங்கும் படையின் முன்னணியில் நிற்பார்கள்; முரசை முழக்குவார்கள்; அரசை அழிப்பார்கள்,' என்று அறிவிக்கிறார். தாய்மைக் குணத்தையே பெண்மைக்கு உரிமையாக்கினர் பெரியோர். ஆனால், அநீதி அரசோச்சினால் அரசியலில் ஈடுபடுவதும் அதை அழிப்பதும் பெண்களின் தலையாய கடமை என்பதே சிலப்பதிகாரம் காட்டும் செந்நெறி. அல்வழிப்பட்ட அரசியல் தாய்மை உணர்வும் கூடி அநீதியால் நிலைகுலைக்கப்பட்டு ஆண்மையாகவும், அழிப்புச் சத்தியாகவும் மாறிவிடும் என்ற புதுநெறியை வேறு யாரும் தீட்டாத புரட்சிச் சித்திரத்தைத் தீட்டியவர் இளங்கோவடிகள். இது இலக்கிய உலகத்தில் இளங்கோ செய்த ஒரு பெரிய புரட்சி.

# 7. தமிழ் நாட்டின் சோமநாதபுரம்

[திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், M.A.]

## 1

ஒரு பெரிய ஏரி - அதனிடையே ஒரு சிறிய தீவு - அந்தத் தீவினுள் ஒரு புற்று - அந்தப் புற்றிலே ஒரு நாகம். நாக-மென்ருல், சாதாரண நாகம் அன்று. ஐந்து தலைப் பாம்பு அது. அந்தப் பாம்பைத் தேடி, பக்கத்துக் கிராமத்திலிருந்து ஒரு பசு தினசரி தண்ணீரில் நீந்தியே வருகிறது. அந்தப் பசுவின் மடியிலோ, ஐந்து காம்புகள். புற்றினுள் இருக்கும் ஐந்துதலை நாகமும், தன் ஐந்து நாக்குகளையும் நீட்டி நீட்டி அந்தப் பசுவிடம் பால் அருந்துகிறது. இது ஓர் அதிசயந்-தானே ?

இந்த அதிசயத்தின் உண்மையை அறிய விரும்பினன் அந்த நாட்டையாண்ட **பொம்மி ரெட்டி** என்ற நாயக்க மன்னன்; அதற்காகத் தன் வழிபடு கடவுளான சிவபெரு-மானை நோக்கித் தவங்கிடந்தான். அவன் கனவில் தோன்-றிய சிவபெருமான், புற்றிடம் கொண்டிருப்பவர் தாமே என்றும், புற்றினடியில் பெரிய புதையல் உண்டு என்றும், அந்தப் புதையலை எடுத்துத் தமக்கு ஒரு கோயில் கட்டலாம் என்றும் விளக்கி வைத்தார்.

விஷயம் தெளிவானவுடனே பொம்மி ரெட்டி புற்றினை அகற்றினன். புற்றினிடத்தே புதையல் மட்டும் அன்றி, ஒரு பெரிய சுயம்புலிங்கமும் இருக்கக் கண்டான்; அப்படித் தம்மை வெளிப்படுத்திய மூர்த்திக்கு, அவர் அருளிய செல்-வத்தைக்கொண்டே ஒரு பெரிய கோயில் கட்ட முனைந்தான். அதே சமயத்தில் மன்னனின் வேட்டை நாயைப் பக்கத்துக் காட்டிலிருந்து ஓடிவந்த முயல் ஒன்று துரத்த ஆரம்பித்தது. ஓடிய நாயும் முயலும் புற்றினை வலம் வந்து ஓர் எல்லை கோலின. அந்த எல்லையையே கோயிலின் எல்லையாக அமைத்து அவன் கோயிலைக் கட்டினன். அந்தக் கோயில் கட்ட அடிகோலியது, சாலிவாகன சகாத்தம், சுக்கில வருஷம் (கி. பி. 1274), பங்குனி மாதம், பத்தொன்பதாம் தேதி அன்றுதான். வடநாட்டிலிருந்து வந்திருந்த சிற்பி, **பத்திரி-காசி அமாம்** என்பவனே கோயில் கட்டும் பணியில் ஈடுபட்-

டிருந்தான். கோயில் கட்டி முடிய ஒன்பது வருஷம் ஆயின. மூர்த்தியின் பிரதிஷ்டையும் சிறப்பாகவே நடந்தேறியது. அப்படிப் பிரதிஷ்டை செய்யப்பட்டவர்தாம் ஜலகண்டே-சுவரர். ஆம்! நீர் சூழ்ந்த தீவினிடையே தாமாகத் தோன்றிய மூர்த்தியல்லவா அவர்?

நாள் பல சென்றன. கோயில் கட்டிய சிற்பியின் மகன் தகப்பனைத் தேடி வடநாட்டிலிருந்து தென்னாடு வந்தான்; தகப்பன் கட்டிய கோயிலைக் கண்டான்; தகப்பனது கைத்-திறனை ஒவ்வொரு சிற்றுளி வேலையிலும் கண்டான்; கோயி-லுக்கு அடிகோலிய நாள் நல்ல நாள் அன்று என்பதையும் அதனால் கோயிலே பாதிக்கப்படும் என்பதையும் அறிந்தான்; அதற்காகக் கோயிலைச் சுற்றியே ஒரு கோட்டையை நல்ல இலக்கினத்தில் கட்டுவது அவசியம் என்பதை மன்னனுக்கு விளக்கினான்.

கோயிலைக் காக்கும் ஆர்வத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் கோட்டை கட்டுவதில் ஈடுபட்டார்கள். பத்துப் பதினைந்து காதங்களுக்கு அப்பாலிருந்தெல்லாம் கற்கள் வந்தன. கோட்டையையும் மன்னன் பொம்மி ரெட்டி அனுபவிக்க முடியவில்லை. ஜலகண்டேசுவரரே பொம்மி ரெட்டியின் கனவில் தோன்றிக் கோட்டையையும் கோயிலை-யும் **தெங்கணிக் கோட்டை வேங்கடதேவமகராயலு** என்பவனிடம் ஒப்படைத்துவிடச் சொல்கிறார். அப்படியே செய்கின்றான் பொம்மி ரெட்டியும், சாலிவாகன சகாத்தம் 1216 ல் (கி. பி. 1295). அன்று முதல் அந்தக் கோட்டை கட்டப்பட்டுள்ள ஊர் **இராயவேலூர்** என்று வழங்கப்-படுகிறது.

இதுதான் „இராயவேலூர்க் கோட்டையும், அதனுள்-ளிருக்கும் கோயிலும் தோன்றிய வரலாறு என்று கூறும் கர்ண பரம்பரை. இந்தக் கதை எப்படியேனும் இருக்கட்டும். கோட்டையும் கோயிலும் உருவாக்கின இலக்கினம் நல்ல லக்கினம் அல்ல என்று எளிதாகச் சொல்லிவிடலாம் நாம் இன்று. ஆம்! வேலூர்தான் அதிசயங்களுக்குப் பேர்போன-தாயிற்றே! அங்கே ஆறு உண்டு; ஆனால், நீரில்லை, கோயி-லுண்டு; ஆனால், மூர்த்தி இல்லை. கோட்டை உண்டு;

ஆனால், கோமகன் இல்லை. ஏன்? இவை மட்டுந்தாமா அதிசயங்கள்! அல்ல; இன்னும் உண்டு. போலீஸ் உண்டு; ஆனால், அதிகாரம் இல்லை.

விபரீதமாக அர்த்தம் செய்துகொள்ள வேண்டா. அங்குள்ள போலீஸாருள் பெரும்பகுதியினர் பயிற்சிக்காகத் தங்கியிருப்பவர்; அதனாலேதான் அவர்களுக்கு அதிகாரம் இல்லை என விநோதமாகக் கூறுகின்றனர். அவ்வளவுதான்! எது எப்படி இருந்தாலும், மூர்த்தி இல்லாக் கீர்த்தியை உடையது அக்கோயில். அந்த விஷயத்தில் சௌராஷ்டிர தேசத்தின் சோமநாதபுரத்தையும் தூக்கியடிக்கக்கூடிய நிலையிலேதான் இருக்கிறது அந்தக் கோயிலின் சரித்திரம்.

கி. பி. 1295 முதல், கிட்டத்தட்ட முப்பது வருஷகாலம் அரசாண்ட வேங்கடதேவமகராயலுக்குப்பின் பத்துப்பேர் வேலூரில் ஆண்டிருக்கின்றனர். பதினேழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலேதான் வேலூரைப் பிஜபூர்ச் சுல்தான்கள் கைப்பற்றியிருக்கின்றார்கள். கான்கானும், அவனுடைய மகன் மகம்மதுகானும் ஆண்டுவந்த காலத்தில் கோயிலுக்குப் பழுது நேரவில்லை. ஆனால், மகம்மதுகானுக்குப் பின் வந்த அப்துல்லாகானிடம் எவனோ, மூர்த்தியின் பீடத்தின் கீழே உயர்ந்த இரத்தினங்கள் இருப்பதாகச் சொல்லிவிட்டான். உடனே மூர்த்தி அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறார்.

பிஜபூர்ச் சுல்தான்களுடைய ஆட்சி அதிக காலம் நீடிக்கவில்லை. மராட்டிய மன்னர் தென்னாட்டைக் கைப்பற்ற ஆரம்பித்தனர். கி. பி. 1676 ல் **துக்கோஜி ராவ்** தலைமையில் மராட்டியர்கள் வேலூர்க் கோட்டையை முற்றுகை இட்டிருக்கின்றனர். வெற்றி கண்ட பின் துக்கோஜி ராவ் பழையபடி ஜலகண்டேசுவரருக்குப் பூஜை செய்ய ஏற்பாடுகள் செய்திருக்கிறார். ஆனால், ஜலகண்டேசுவரரின் ஜாதகவிசேஷம், இரண்டு வருஷத்தில், **சுல்பிகர்க்கான்** என்ற முகம்மதியன் மறுபடியும் துக்கோஜியின் மகன் **திங்கோஜியை** வெற்றி கண்டு கோட்டையைக் கைப்பற்றியிருக்கிறான். ஜலகண்டேசுவரரின் அபிஷேக ஆராதனைகள் அதனால் தடைப்பட்டிருக்கின்றன. இப்படியே இருந்திருக்கிறார் ஜலகண்டேசுவரர் இருபத்தொரு வருஷம்.

மறுபடியும் மராட்டிய மன்னர் ஸ்ரீநிவாசராவ் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றியிருக்கிருர். இவர் ஆண்ட பதினேழு ஆண்டுகள், இவர் மகன் ராமராவ் ஆண்ட பதின்மூன்று ஆண்டுகள் பழையபடி ஜலகண்டேசுவரர் ஆலயத்தில் மணிகள் ஒலித்திருக்கின்றன. கி. பி. 1708 லோ தாவுத்கான், மராட்டியர்களே அகற்றிவிட்டு, வேலூரைக் கைப்பற்றியிருக்கிருன். இதன்பின் ஆர்க்காட்டு நவாபுகளான சததுல்லாகான், குலாம் அலிகான், பாக்கர் ஆலி முதலியவர்களுடைய ஆட்சியின்கீழ் வேலூர்க் கோட்டை இருந்து வந்திருக்கிறது. இந்தக் காலத்தில் ஜலகண்டேசுவரர் போன இடம் புல் முளைத்திருக்கிறது. மூர்த்தி இல்லாவிட்டாலும் கோயில் மட்டும் கோட்டைக்குள்ளேயே இன்றும் இருந்துகொண்டிருக்கிறது.

## 2

இராயவேலூர் இன்றைய வடவார்க்காட்டு ஜில்லாவின் தலை நகர் ; நல்ல அழகான ஊர். ஊரைச் சுற்றிலும் குன்றுகள். ஊர், மா, ஆரஞ்சு, திராட்சை முதலிய பழங்களுக்குப் பிரசித்தி பெற்றது. இவற்றையெல்லாம்விட நல்ல நல்ல காய்கறிகள் உண்டு. அவற்றிலும் கீரை வகை பத்துக்கு மேல் உண்டு. சக்கரவர்த்திக் கீரை என்றே ஒரு கீரை. அந்தக் கீரையைக் கறி சமைத்துச் சாப்பிடுபவர்கள், 'ஆம்! இந்தப் பெயர் அந்தக் கீரைக்குத் தகும்! தகும்!' என்று தாளமே போட ஆரம்பித்துவிடுவார்கள்.

முன்னமே சொன்னபடி இந்த ஊரில் முக்கியமானது கோட்டை ; தமிழ் நாட்டில் காண்கின்ற பழைய கோட்டைகளில் எல்லாம் சிறந்த அழகு வாய்ந்தது. தேசிங்குராஜனின் செஞ்சிக் கோட்டை, அளவிலும் உறுதியிலும் உயர்ந்தது தான் என்ருலும், இந்தக் கோட்டையில் உள்ள அழகில்லை அங்கு. கோட்டை கிட்டத்தட்டச் சதுர வடிவமானதே. கோட்டை மதிற்சுவரில் இரண்டு அடுக்குகள் உண்டு. கீழ்த் தட்டிலே உள்ளவை அர்த்தசந்திர வளைவுகள். அந்தக் கீழ்த் தட்டில் ஆங்காங்கே காவற்காரர்கள் தங்குமிடங்கள் உண்டு. கோட்டைச் சுவரின் மேல் தளத்திலோ, ஒரு 'கார்' செல்லக்

கூடிய அளவிற்குள்ள வீதி உண்டு. இந்தக் கோட்டையைச் சுற்றி அமைந்தது ஆழ்ந்து அகன்ற அகழி. இந்த அகழிக்குத் தண்ணீர் பக்கத்தில் உள்ள **சூரிய குண்டம்** என்ற குளத்திலிருந்தே வந்தது என்கிறார்கள். கோட்டையையும் அகழியையும் எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் அழகாய்த்தான் இருக்கும்.

இனிக் கோட்டைக்குள் போகலாம். கோட்டையைச் சுற்றியுள்ள அகழியைக் கடப்பதற்கு அன்று ஒரேயொரு தூக்குப் பாலந்தான் இருந்ததாம். கோட்டைக் காவலர்கள் அனுமதியில்லாமல் உள்ளே ஒருவரும் செல்ல முடியாதாம். இன்று அப்படி இல்லை. கோட்டைக்குள்ளே இருக்கும் கட்டடங்களில் சர்க்கார் ஆபீஸ்கள் எல்லாம் இருப்பதால், ஜனங்கள் அங்கே போய் வர வசதியாக வடபுறத்தில் அகழியைத் தூர்த்து, பிரதான வாயிலுக்கு ஒரு பாலம் கட்டியிருக்கிறார்கள். அந்த வாயில், அடையாத வாயில்; அகலமாகத்தான் இருக்கிறது. இன்று, கோட்டைக் கதவுகள் இல்லாத காரணத்தால் ஒரேயொரு போலீஸ்காரர் மட்டும் அந்த வாயிலில் நின்று காவல் புரிவார். கோட்டைக்குள் போவார் எவரையும் அந்தப் போலீஸ்காரர் தடை செய்ய மாட்டார். அவருடைய காவற்பணியெல்லாம் உள்ளே போகும் அதிகாரிகளுக்குச் சலாம் போடுவதோடு சரி! ஆதலால், யாரும் கோட்டைக்குள் தாராளமாய் நுழையலாம். நுழைந்தபின் வலப் பக்கமாகத் திரும்பினால், ஜலகண்டேசுவரர் கோயிலைப் பார்க்கலாம். கோயிலுக்கு முன்னால் இருக்கும் திறந்த வெளிதான், பயிற்சிபெறும் போலீஸாரின் ‘கவாத்து’ மைதானம் (Parade ground).

இனிக் கோயிலுக்குள் போகலாம். கோயில் வாசலிலேயே இரண்டு துவாரபாலகர்கள் காத்து நிற்கின்றார்கள். உள்ளே கிடந்தவர்களை வெளியே கொண்டு வந்து நாட்டி வைத்திருக்கிறார்கள், இன்றைப் புதைபொருள் இலாக்கா ஆராய்ச்சியாளர்கள். கோபுரம் கம்பீரமாக மிகவும் பழுதுபடா வகையில் நீண்டு உயர்ந்து நிற்கிறது. எண்ணிறந்த சிற்ப உருவங்கள் கோபுரத்தை அழகு செய்கின்றன. கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றால், அகன்றதொரு

பெரிய முற்றமும் அதன் தென்பகுதியிலே ஒரு மண்டபமும் காணலாம். அதுதான் சிற்பக்கலைப் பிரசித்தி பெற்ற கல்யாண மண்டபம். மண்டபம் முழுவதும் பிரமாண்ட-மான தூண்கள் உண்டு. முதல் வரிசைத் தூண்களிலே குதிரைகள்மேல் ஆரோகணித்து வரும் வீரர்கள் சிறுத்தை-களோடு போரிடும் காட்சி காண்கிறது. இந்த மண்டபத்திற்-குள்ளே நுழைந்துவிட்டாலோ, ஒரே அதிசயந்தான். ஒவ்வொரு தூணிலும் பன்னிரண்டு இடங்களிலே சிற்ப உருவங்கள்—சிவபெருமானுடைய மூர்த்தங்கள், மகா-விஷ்ணுவின் தசாவதாரங்கள், பிள்ளையார், அனுமார், மஹிஷாசுர மர்த்தனி என்றெல்லாம் காட்சிகள். பெண்கள்-தாம் எத்தனை பேர், எப்படி எல்லாம் காட்சியளிக்கிறார்கள்! இந்த மண்டபத்தின் மேல் தளத்திலே ஒரு சிறிய உள் மண்டபம் உண்டு. அங்கே அம்பிகையின் திருவுருவம் சிதைந்த நிலையில் இருக்கிறது. தன்னைப் பிரிந்து சென்ற ஜலகண்டேசுவரர் திரும்பி வரும் நாளை எதிர்நோக்கித் தவங்கிடக்கிறாளோ என்று தோன்றும்படி, அவள் முகத்தில் சிந்தனை தேங்கிக் கிடக்கின்றது. அவள் திருவுருவமும் கூடத்தில் உள்ள சிற்ப உருவங்கள் அத்தனையும் அழகாய் இருக்கின்றன. இந்த மண்டபத்தைக் கண்ட மேல் நாட்டுக் கலா ரஸிகர்கள் இந்தத் தூண்களையெல்லாம் அப்படியே பெயர்த்து எடுத்துத் தங்கள் நாட்டுக் கலைக்கூடத்திற்கு அனுப்பிவிட எண்ணினார்களாம். அதற்காகக் கப்பல் ஒன்று-கூடப் பம்பாய்க்கு வந்துசேர ஏற்பாடு செய்திருந்தார்களாம். ஆனால், அப்படிப்பட்ட விக்கினம் ஏற்படாமல் தடுத்து-விட்டார் அங்குள்ள விக்கினேசுவரர். அதைத் தடுக்கத்தான் அவர் தம்முடைய மூஷிக வாகனத்தில் ஏறி எவ்வளவு விரைவாக ஓடி 'வந்திருக்கிறார்! அதையே பாருங்களேன்! விக்கினேசுவரர் செய்த சூழ்ச்சிதானோ என்னவோ, ஏற்பாடு பண்ணியிருந்த கப்பல் பம்பாய்த் துறைமுகம் வந்து சேராமலே வழியில் மூழ்கிவிட்டதாம். அதனால் கலாரஸிகர்கள் முயற்சி கைவிடப்பட்டதாம்.

இந்தக் கல்யாண மண்டபத்தை விட்டு, ஐந்து மணிக்குக் கொஞ்சம் முன்னதாகவே வெளி வந்தால்தான்

இந்தக் கோயிலின் உட்பிராகாரத்திற்குப் போகலாம். அங்கே கர்ப்பக் கிருகத்தைச் சுற்றியிருக்கும் பிராகாரத்தையும் வலம் வந்து மூலவர் இருந்த இடத்தைக் கண்டு வணங்கலாம். அங்கிருந்து பத்து மைலுக்கு அப்பாலுள்ள விரிஞ்சிபுரக் கோயிலுக்குச் செல்லும் சுரங்க வழியையும் பார்க்கலாம். சுரங்க வழியில் இறங்கும் துணிவு நமக்கு வாராது. ஜலகண்டேசுவரருக்கே வரவில்லையே! வந்திருந்தால்தான் அன்று முகம்மதியர்கள் உள்ளே நுழைந்தவுடனே ஓடித் தப்பியிருப்பாரே!

கோயிலைச் சுற்றிப் பார்த்துவிட்டு வெளியில் வந்தால், நம் இருதயத்தை ஏதோ ஒன்று அழுத்தும். இவ்வளவு பிரமாண்டமான கோயிலை இப்போது கட்டுவது என்பது சாத்தியமான காரியம் அல்லதான். கட்டி வைத்து அதன் கட்டுக்குலையாமல் இருக்கும் கோயிலில் அன்றிருந்த மூர்த்தியை இன்று திரும்பவும் பிரதிஷ்டை செய்ய முடியாதா என்ற கேள்வி நம் உள்ளத்தில் எழும். இந்தக் கேள்விக்குப் பதில்சொல்ல வேண்டுபவர்கள் வேலூர் வாசிகள் மட்டுமல்ல, தமிழ் மக்கள் அத்தனை பேருந்தாம்.

## 3

தென்பாண்டி நாட்டிலே தென்காசியிலே ஒரு கோயில். ஆம், அந்த வடகாசியில் கோயில் கொண்டிருக்கிறாரே அதே விசுநாதருக்குத்தான் ஒரு கோயில். காசிக்குப் போய், கங்கையில் முழுகிக் கருமத்தைத் தொலைக்க இயலாதவர்களுக்கும் அவகாசம் இல்லாத தமிழ் மக்களுக்கும் **பராக்கிரம பாண்டியன்** கட்டிய கோயில் அது. கிட்டத்தட்ட ஏழு வருஷகாலம், பாண்டியன் அந்தக் கோயில் கட்டும் பணியிலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருந்திருக்கிறான்; பொன்னையும் பொருளையும் அள்ளிக் கொடுத்துக் கோயிலைக் கட்டி முடித்திருக்கிறான்; சிறப்பாகக் கும்பாபிஷேக தினத்தன்று நிறைந்த மனத்தோடு தான் கட்டிய கோயிலைக் காண வந்திருக்கிறான். கோயிலிலோ, ஏராளமான கூட்டம்! மந்திரோச்சாடனங்கள், ஆராதனைகள், அருச்சனைகள் எல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன. வந்த பாண்டிய

மன்னன் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கியிருக்கிறான். விழுந்து வணங்கியது யாரை? கோயிலிலே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள அந்தக் காசி விசுவநாதரையா? அல்ல. கோயிலைக் கட்ட உதவினார்களே அந்தச் சிற்பிகளையா? அல்ல. கோயில் கட்டுவதற்கு வேண்டியவைகளை எல்லாம் வரையாது கொடுத்து உதவினார்களே குடிமக்கள், அவர்களையா? அல்ல. அந்தக் கோயிலின் கும்பாபிஷேகத்திற்கென்றே, நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்து குழுமியிருக்கிறார்களே மக்கள், ஆம், அந்த நடமாடும் கோயில்களை நோக்கித்தானா? அல்ல. பின் யாரைத்தான் விழுந்து வணங்குகிறான் அவன்? ஆம், அதை அவனே சொல்கிறான்.

> 'ஆரா யினும்இந்தத் தென்காசி மேவுபொன் ஆலயத்து
> வாராத தோர்குற்றம் வந்தால்,அப் போதங்கு வந்து,அதனை
> நேராக வேதிருத் திப்புரப் பார்தமை நீதியுடன்
> பாரார் அறியப் பணிந்தேன் பராக்ரம பாண்டியனே.'

என்று அவனே பாடி, தான் யாருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினான் என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறான். உண்மைதானே? கோயில் கட்டி முடிப்பது பிரதானமான காரியம் அன்று. அப்படிக் கட்டிய கோயிலுக்கு வாராததோர் குற்றம் வந்தால், நேராகவே திருத்தி அமைப்பதுதான் முக்கியம். பராக்கிரம பாண்டியன் கோயிலுக்கும் வாராததோர் குற்றம் வந்திருக்கின்றது. இடிந்த கோபுரம் இன்னும் இருக்கத்தானே செய்கிறது? அதைப் போலவே வாராததோர் குற்றந்தான் இந்த ஜலகண்டேசுவரர் கோயிலுக்கும் வந்திருக்கிறது. அந்தச் சௌராஷ்டிர தேசத்துச் சோமநாதபுரத்து ஜோதிர்லிங்கத்திற்கு வாராது வந்த குற்றத்தை நேராகவே திருத்துவதற்கு ஒரு **சர்தார் பட்டேல்** கிடைத்தார். ஆனால், இந்தத் தமிழ் நாட்டின் சோமநாதபுரத்தில்—கோயிலைத் திருத்துவதற்கு அல்ல—அந்தக் கோயிலில் மூர்த்தியைமட்டும் பிரதிஷ்டை செய்து அதற்குப் பூஜை முதலியன ஏற்படுத்த, இங்கு ஒரு சர்தார் தோன்றுவாரா? தோன்றுவாரென்றால், 'எப்போது தோன்றுவார்?' என்பதுதான் கேள்வி.

## 8. 'எடுக்கவோ, கோக்கவோ?'

[திரு. த. சே. உமாபதி, M.A., L.T., (Dip. in Geog.)]

இந்துக்களின் இதிகாச நூல்கள் இரண்டனுள் ஒன்று **மகாபாரதம்**. இதன் ஏற்றத் தாழ்வுகளை எடுத்தியம்புவதன்று இக்கட்டுரையின் நோக்கம். பாரதக் கதையை உண்மை நிகழ்ச்சியாகக் கொள்ளினும், கற்பனைக் கதையாகத் தள்ளினும், அதன்கண் இடம் பெற்றுள்ள சில உயர்ந்த மக்கட்பண்புகள் புறக்கணிக்கத் தக்கவையல்ல. அத்தகைய பண்புகள் நிரம்பப் பெற்ற வீரர் சிலரைக் கற்பித்துள்ளார் அந்நூலை முதன்முதல் இயற்றிய **வியாச முனிவர்**. பாரதத்தைத் தமிழில் மொழி பெயர்த்த **வில்லிபுத்தூராழ்வா**ரும் அவ்வீரர்களின் பண்புகளை எழிலுற எடுத்து இயம்புகின்றார். பாரத வீரருள் வீரத்துக்கும், கொடைக்கும், நன்றியறிதலுக்கும் புகலிடமாய் விளங்கியவன் **கன்னனே** என்பது பாரதம் பயின்றவர் அனைவரும் ஒப்ப முடிந்த உண்மை. அவ்வொப்புயர்வற்ற வீரனின் நன்றியறிதற்றிறன் ஒன்றைப்பற்றி மட்டும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நமது நாட்டு இராச தந்திரிகளுள் முதற்கண் வைத்து எண்ணப்படுபவர் **சாணக்கியர்**. இவர் வரலாற்றுக் காலத்தவர். வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட இதிகாச காலத்தில் ஈடுமெடுப்புமற்று விளங்கிய இராசதந்திரியார் **துவாரகை** மன்னரான **திருக்கண்ணபிரானுர்**. இவர் கௌரவரையும் அவர்கட்குத் துணை நின்றவரையும் அழித்துப் பாண்டவர்க்கு வெற்றியளிக்க உறுதி கொண்டவர். ஆதலால், தமது விருப்பம் நிறைவேறுவதற்கு எத்தனையோ சூழ்ச்சிகளைக் கையாண்டார் இவர்.

பாண்டவ வீரனுன **பற்குனன்,** அக்காலத்து வில் வீரருள் முதன்மை பெற்று விளங்கினுன். அவனையும் வெல்லும் ஆற்றல் அமைந்தவன் கன்னன். அதற்குரிய வாய்ப்புக்களையும் அவன் பெற்றிருந்தான். அருச்சுனன் **துரோணரிடம்** விற்பயிற்சி பெற்றவன். கன்னனே, **பரசுராமரிடம்** விற்கலை பயின்றவன். மேலும், கன்னன்

தெய்விகம் பொருந்திய கவச குண்டலங்களைப் பெற்றிருந்தான். அவற்றை அவன் அணிந்து போர் புரிவானாயின், தேவரும் மூவருங்கூட அவனை வெல்லல் இயலாது. அன்றியும், பற்குனன்பாற் பகை பூண்ட **அசுவசேனன்** என்ற பாம்பு, அவனைக் கொன்று பழி வாங்க உறுதி பூண்டு, அவனுக்குப் பகைவனாய் விளங்கிய கன்னனை நாடினமையால், அதனை அவன் அன்புடன் வளர்த்து வந்தான். அப்பாம்பு கன்னனுக்குக் கணையாயிருந்து காண்டீபனைக் கொல்லக் காத்திருந்தது.

இவற்றை அறிந்திருந்த திருக்கண்ணபிரானார் முதலில் தாமே கன்னனைக் கண்டு, அவன் பிறப்பைப்பற்றிக் கூறி, அவனைப் பாண்டவருடன் சேர்ந்துகொள்ளுமாறு யோசனை கூறினார். அது கேட்ட கன்னன், அவரை நோக்கி, “ கண்ணபிரானீர், உமது கூற்று வெகு நன்று! யான் எந்நாட்டவன், எக்குலத்தவன் என்பவற்றை அறியாத நிலையில் என்னைத் தன்னையொத்த மன்னன் மகனாக மனத்துட்கொண்டு, என்பால் அளவிறந்த அன்பு பூண்டு, என்னை ஆருயிர் நண்பனாக மதித்து, எனக்குப் பெருஞ்செல்வத்தை நல்கி, அரசினை அளித்து, முடியும் சூட்டி அகம் மகிழ்ந்த அன்பன் **அரவக் கொடியோனுக்கும்**, தம் பகைவருள் தலைவனாக என்னைக் கருதி வாழும் பாண்டவருக்கும் போர் தொடங்கும் காலம் அண்மையில் இருப்பதை அறிந்தும், ‘ எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு,’ என்னும் ஒப்பில் உண்மையை உய்த்துணர்ந்திருந்தும், என்னைப் பாண்டவருடன் சேர்ந்துகொள்ளுமாறு கூறுகின்றீரே! உமது அறிவுரை வெகு நன்று! யான் பாண்டவருடன் சேர்ந்தால், உலகத்தவர் என்னை எள்ளி இகழமாட்டாரா ? நீரறியப் பெண்களும் என்னைக் கண்டு ஏளனம் செய்ய மாட்டார்களா ? எனது உள்ளந்தான் இதற்கு ஒருப்படுமா ? இதனை நீர் அறியீரோ ? கண்ணபிரானீர், நான் பாண்டவர்க்குப் பகைவனேயன்றி உமக்குப் பகைவனல்லனே! அங்ஙனமாக, என்னை உலகத்தவர் இகழ்வதைக் காண நீர் விழைவது ஏனோ? துவாரகை மன்னரே, உத்தமோத்தமரே, உமது யோசனைக்கு ஒரு

கோடி நன்றி செலுத்துகின்றேன்! செய்ந்நன்றி கொல்லும் இழிந்த பண்புக்கும் அங்கநாட்டதிபனுக்கும் நெடுந்தூரம்; சென்று வாரும்!'' என்று கூறித் தன் நன்றியறிதலை வெளிப்படுத்துகின்றான். இதனை எழிலுற எடுத்துக் காட்டுகின்றார் வில்லிபுத்தூரார் :

'' ஆரென் றறியத் தகாதவெனை
அரசும் ஆக்கி முடிசூட்டிச்
சீருந் திறமுந் தனதுபெருந்
திருவு மெனக்கே தெரிந்தளித்தான்;
பாரின் றறிய நூற்றுவர்க்கும்
பழிதீர் வென்றிப் பாண்டவர்க்கும்
போரென் றறிந்தும் செய்ந்நன்றி
போற்று தவரிற் போவேனே ?''

செய்ந்நன்றியறிதல் என்னும் சீரிய பண்பினைக் கன்னன்பால் இங்குத் தெளிவுறக் காண்கின்றோம். இதனை மற்றுமொரு நிகழ்ச்சி வலியுறுத்துவதைக் காண்போம் :

கன்னன் கூற்றைக் கேட்ட திருக்கண்ணபிரானார், அதனோடு அமையாது, குந்தியை அவன்பால் அனுப்பினார். குந்தியும் கன்னனைக் கண்டாள்; தானே அவன் தாய் என்பதைப் புலப்படுத்தினாள். பின்னர் அவள் அவனை நோக்கி, '' மதலாய், நீ யார் என்பதனை அறியாததற்கு முன் இருந்த உனது நிலை வேறு; உன்னையறிந்த பின் தோன்றியுள்ள நிலை வேறு. பாண்டவரும் கௌரவரும் நாடு காரணமாகப் போர் புரிய உறுதி கொண்டுள்ளனர். ஆயினும், நின் பிறப்பைப்பற்றிப் பாண்டவர் அறிவாராயின், அக்கணமே போரை நிறுத்தி நினக்கு முடிசூட்டி, நின்னடிபணிந்து, நின் ஏவல்வழி நிற்பர். உன்னை இன்னானென அறியாமலே உன்பால் அன்பு பூண்டு, உன்னை உடன் பிறந்தவனெனக் கருதி, உனக்கு அரசளித்து, உன் ஆணைவழி நிற்கும் அரவக்கொடியோனும் அந்நிலையை வரவேற்பான் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. ஆதலால், நீ குரு குலத்தவர்க்குத் தலைமை தாங்கித் தனியாட்சி புரிவதே சாலச்சிறந்ததாகும். இதற்கு நீ உடன்பட்டால், என் உள்ளமும் குளிரும்; உனக்கும்

பெருமையுண்டு. என்ன கூறுகின்றாய்?'' என்று கேட்-டாள்.

அவ்வுரை கேட்ட கன்னன், தாயை வணங்கி, ''அம்மையீர், நீர் கூறுவது நன்று! மிக நன்று! என்னை நீர் பெற்றெடுத்த போது என்மீது அன்பில்லாமையாலோ, அன்றி நும்மை வந்தடையக்கூடிய பழிக்கு நாணியோ, என்னைக் கைவிடுத்தீர். அன்று நாள் தொடங்கி இன்றள்வும் என்னைத் தன் உடன் பிறந்தவனாகக் கருதி, எனக்கு அர-சளித்து, முடி சூட்டி, என்னுடன் இருந்து உண்டு, தன் தம்பியர் தொண்ணூற்றொன்பதின்மரும் மற்றுமுள்ள சுற்றத்தவரும் என் அடி பணிந்து ஏவல் புரியுமாறு செய்து, எனக்கு ஏற்றமளித்தவன் நந்தியாவட்டத் தாரணிந்த நராதிபனன்றோ? அவன் என்பால் கொண்டுள்ள அன்பு எல்லையற்றது; ஈடில்லாதது.

''ஒருநாள் துரியோதனனைக் காணச் சென்ற யான், அவன் அந்தப்புரத்தில் இருந்தானெனக் கேட்டு, அங்குச் சென்றேன். ஆனால், அவன் அங்கு இல்லை. அவன் மனைவி மட்டும் தனியே இருந்தாள். என்னைக் கண்ட அவள் தன் கணவன் வரும் வரையில் பொழுது போக்குக்காகச் சொக்கட்டான் ஆட விழைந்தாள். நானும் உடன்பட்டேன். இருவரும் ஆடத் தொடங்கினோம். ஆட்டத்தில் நான் வெற்றியுறுவேன் போலத் தோன்றியது. இந்நிலையில் நாங்கள் இருந்த இடத்தை நோக்கி வந்துகொண்டிருந்த தன் கணவன் துரியோதனனைக் கண்ட அவள், துண்ணென எழுந்தாள். அவன் வந்ததை அறியாத யான், அவள் ஆட்டத்தில் தோல்வியுறுவதை விரும்பாமல் எழுந்து போக நினைத்தாள் என எண்ணி, அவள் இடையில் அணிந்திருந்த மேகலையைப்பற்றி, அவளை நிறுத்த முயன்றேன். அம்மேகலை அறுந்தது; அதில் கோக்கப்பெற்றிருந்த மணிகள் சிதறின. அந்நிலையில் என் முன் நின்றான் அப்பேரரசன். அரசர்க்கரசனான அவன், அந்நிலையில் செய்யத்தக்கது ஒன்றுதான். தன் உடைவாளை உருவித் தன் கோப்பெருந்தேவியின் மேகலையைத் தொட்டிழுத்த துணிவுக்கு என் தலை தரையில் உருளுமாறு செய்திருத்தல்

வேண்டும். அங்ஙனம் செய்தானல்லன் அப்பெருந்தகை. அவன் முகத்தில் கோபத்தின் குறியோ, ஐயத்தின் அடையாளமோ காணப்படவில்லை. அன்பு நிறைந்த முகத்தில் அரும்பிய முறுவலுடன் அவன் நின்றான். கோப்பெருந்தேவியின் மேகலையினின்றும் இற்றுச் சிதறிக் கிடந்த மணிகளைச் சுட்டி, "இவற்றைச் சேர்த்துத் தரவா, அல்லது கோத்துக் கொடுக்கவா?" என்ற கனிவு மிக்க சொற்கள் அவன் வாயினின்றும் தோன்றி என்னை வியப்புறச் செய்தன! அத்தகைய பெறற்கருநண்பன்—வெற்றி வேல் வேந்தன்—மனத்துக்கினிய மன்னன்—இராசாதிராசன்—துரியோதனனை விட்டு, யான் இன்று பாண்டவர் பக்கல் வருவேனாயின், என்னை இவ்வுலகத்தவர் எள்ளி நகைக்க மாட்டாரா? 'நன்றி கெட்ட நாய்!' என்று பெண்களும் பேச மாட்டார்களா? என்னை ஈன்றெடுத்த அன்னையாராகிய நீர் இத்தகைய இழிவை எனக்குத் தேடித்தருவது அழகன்றே! அன்னையீர், என்னை அரசனாக்கி அகம் மகிழ்ந்த அருந்திறல் வேந்தன் நாளை என்னுடைய தம்பியர் பாண்டவருடன் போர் தொடுக்கும்போது அவனுடன் செருக்களஞ் சென்று, எனது உடலில் உயிர் உள்ளளவும் வீரப் போர் புரிந்து, எனது நன்றியறிதலை வெளிப்படுத்துவதே யான் இனிச் செய்யத்தக்கதாகும். இஃதொன்றே எனக்கு இம்மையிற் புகழையும் மறுமையில் வீட்டையும் தேடித் தரத்தக்கதாகும். ஆதலால், அன்னையீர், யான் பாண்டவருடன் வந்து கலந்து உறவாடுவதைப்பற்றிய எண்ணத்தை அறவே நீக்கிவிடும்," என்று கூறிக் குந்தியின் மனத்தை மாற்றினான்.

இச்செய்தியை வில்லிபாரதச் செய்யுள் அழகுற எடுத்துக் கூறுவதைக் காணலாம் :

"மடந்தைபொற் றிருமே கலைமணி யுகவே
மாசறத் திகழுமே காந்த
இடந்தனிற் புரிந்தே யான்அயர்ந் திருப்ப,
'எடுக்கவோ, கோக்கவோ?' என்றான் ;
திடம்படுத் திடவேல் இராசரா சனுக்குச்
செருமுனைச் சென்றுசெஞ் சோற்றுக்

கடன்கழிப் பதுவே எனக்கினிப் புகழும்
கருமமும் தருமமும் என்ருன்.’’

கன்னனது செய்ந்நன்றியறிதற்றிறன் இதனோடு நிற்கவில்லை. அவன் தன் அன்னையிடம் வேண்டிப் பெற்ற வரம் ஒற்றுண்டு: பாரதப் போரில் தான் வீழ்ந்த பின்னரே தன் பிறப்பைப் பற்றிய வரலாற்றைப் பாண்டவர்க்குத் தெரிவிக்க வேண்டும் என்பதே அவ்வரம். அதற்கு முன் பாண்டவர் தன்னைப்பற்றி அறிந்தால், அவர் போரைக் கைவிடுவது உறுதி. **போர் கைவிடப்படுமாயின், துரியோதனனுக்குத் தனது நன்றியறிதலை வெளிப்படுத்த வாய்ப்பின்றிப் போகுமே என்று அஞ்சுகின்ருன் கன்னன்.** ஆதலால், அன்னையிடம் அவ்வரத்தை இரந்து பெற்ருன். ஆயினும், தன் அன்னை தனது தாய்மை அன்பால் தன் உறுதியினின்று திரும்பிவிடக்கூடுமோ என்று ஐயுறுகின்ருன் கன்னன்; அவள் உண்மையை வெளிப்படுத்தாமல் உறுதியுடன் இருக்குமாறு செய்ய ஒன்று கூறிப் பயமுறுத்துகிருன் அவளை. ‘‘அன்னையீர், நீர் எனக்கு ஈந்த வரத்தைக் காப்பாற்ருவிடின், என்ன நேரும் என்பதைக் கூறுகின்றேன்; கேளும்: நீர் போர் தொடங்குவதற்கு முன்போ, அன்றிப் போர் நடைபெறும்போதோ என் பிறப்பைப்பற்றிய உண்மையைப் பாண்டவர்க்குக் கூறுவீராயின், என்ன நேரும் என்பதனைச் சிந்தித்துப் பாரும். பாண்டவர் உண்மையை அறிந்தால், அவர் தமது நாட்டை உடனே எனக்கு வழங்குவர். நான் அதனை அப்போதே என் துணைவன் துரியோதனனுக்கு வழங்கிவிடுவேன். பாவம்! பாண்டவர் மீண்டும் நாட்டை விட்டுக் காட்டுக்கு ஏக நேரும்! இதனை நீர் விரும்பமாட்டீரன்றே? ஆதலால், நான் போரில் விழும் வரை எனது பிறப்பின் உண்மையைப் பாண்டவர்க்கு அறிவியாதிருத்தலே அறிவுடைமையாகும்,’’ என்று கூறுகின்ருன். இப்பயமுறுத்தல் உண்மையிலேயே குந்தியை உறுதியுடன் இருக்கச் செய்தது. இச்செய்தி கீழ் வரும் செய்யுளிற்கண்டு இன்புறத்தக்கது:

‘‘உய்வருந் திறல்வெம் போர்முடிப் பளவும்
உமக்குநான் மகன்எனுந் தன்மை

ஐவரும் அறியா வண்ணம்நீர் காப்பீர் ;
அல்லதங்(கு) அவர்சிறி தறியின்
மைவருங் கடற்பார் அனைத்தையு மெனக்கே
வழங்குவர் ; வழங்கிஞல், யான்என்
கைவரும் துணைவன் தனக்கலால் வழங்கேன் ;
கடைப்பிடி கருமமா ெ'தன்ருன்.''

என்னே கன்னனது நன்றியறிதற்பண்பு !